padippakam

# திருப்பம்

அரசியல், கலை, இலக்கிய, சமூக மாத ஏடு

இதழ் 01

ஏப்ரல் 1998



விலை ரூபா 25.00

படிப்பகம்

# VJP INTERNATIONAL BOOKSHOP

- பாடசாலை உபகரணங்கள்
- அரிய பாடநூல்கள்
- பத்திரிகைகள் சஞ்சிகைகள்
- கவிதைத் தொகுப்புக்கள், சிறுகதைகள், நாவல்கள்

*பாடசாலை முதல் பல்கலைக்கழகம் வரை*
*தேடித்தெரியும் அறிவுக்கு நாடி வரவேண்டியது:*

# INTERMOD

240, Galle Road,
Colombo-6 ,
T.P. 503141

Branch:

**Modern Book Centre,**

66. Kotahena Street,
Colombo-13

padippakam

# திருப்பம்

முனை : 01 15 ஏப்ரல் 1998 இதழ் : 01

*ஆசிரியர்:*
மதுரன்

*கணனிப்பொறி அமைப்பு:*
மதுரி

*அச்சுப்பதிவு:*
**Perfect Printers,**
130, Dias Place,
Colombo-12

*வெளியீடு:*
**The Future Foundation,**
215, F/2/6, Park Road, Colombo-5.
01-593331

*விநியோகம்:*
**Lanka Book Dept.,**
F.L.1.14,
Dias Place,
Colombo-12.

## நெஞ்சோடு நெஞ்சம்

புத்தாண்டு வாழ்த்துக்கள்!

வசதிகள் குறைவுதான். ஆனாலும் பலத்த எதிர்பார்ப்பினை ஏற்படுத்திமிருக்கிறது திருப்பம் என்பது எம்மை இன்னும் பயப்படுத்துகிறது.

இப்படித்தான் முன்பும் ஏராளமான இதழ்கள் மலர்ந்தன. பின்பு காணாமல் போய்விட்டன. ஏன் என்பதற்கு விசாரணைஆணைக்குழுக்கள் அவசியமில்லை. ஏனெனில் நாமேதான் காரணமே.

முதல் இதழ்தானே. முடிந்தவரை முயன்றுள்ளோம். எதிர்பார்த்த சில ஆக்கங்கள் வந்துஎம் கைகளில் சேராமல் தபால்காரரின் பைகளில் தேங்கிவிட்டன. அவை அடுத்த இதழில் நிச்சயம் இடம்பிடிக்கும் சீர்குலைவே வாழ்க்கையான பினனரும் நம்பிக்கையோடும் பிறழ்வுகளின்றியும் அடியெடுத்து வைக்கும் மக்களின் கரம்பற்றிவருகிறது திருப்பம்.

கனமான, காரமான, வளமான கருத்துக்களின் சங்கமமாக இது அமைய வேண்டும் என்பது உங்கள தும் எங்களதும் விருப்பம். வழிநடாத்த வேண்டியது வாசர்களாகிய உங்களது பொறுப்பே. தரமான ஆக்கங்களுக்கும் உரமான கருத்துக்களுக்கும் திருப்பத்தின் பக்கங்களில் என்றைக்கும் வரவேற்பிருக்கும். உள்ளதை உள்ளபடி சொல்வோம். நல்லதைச் சொல்வோம். நிச்சயமாகப் பிரதிகளின் எண்ணிக்கை மட்டுமே எங்களது இலக்கல்ல என்பதை போகப்போக நீங்களே புரிந்து கொள்வீர்கள். ஒவ்வொரு இதழையும் பத்திரப்படுத்துங்கள். வாசிப்புப் பழக்கத்தைக் கற்று கொடுங்கள்! இது வாசித்து சற்று யோசித்து மனிதத்தை நேசிக்கவே!!

மீண்டும் சந்திப்போம்!

மதுரன்

**IN THE MARKET PLACE OF IDEAS**



படிப்பகம்

padippakam

**அடுத்த இதழில் ------!**

நேருக்கு நேர்(பேட்டி)
வாசகர் கேள்வி –பதில்
அத்துடன்

பேராசிரியர் கே.சிவத்தம்பி
வி.ரி.தமிழ்மாறன்
கலாநிதி செல்வி திருச்சந்திரன்
மு.பொன்னம்பலம்
சு.வில்வரெத்தினம்
ஜ:.பார்
சிராஜ் மஸ்ஹுர்
அநேகா இளங்கோவன்
பேராசிரியர் சந்திரசேகரம்

ஆக்கங்கள், வாசகர் கேள்விகள், கருத்துக்கள் மற்றும் விபரங்களுக்கு தயங்காது எழுதுங்கள்:

நிர்வாக ஆசிரியர்,
திருப்பம்
***215,F/2/6, Park Road,***
***Colombo-5***



படிப்பகம்

padippakam

# திருப்பத்தினுள்ளே............☞


1. மனக்கேடு ------ சிறுகதை 04
எஸ். ரஞ்சகுமார்

2. இஸ்லாத்தில் கல்விக் கோட்பாடு (மொழிபெயர்ப்பு) 11
பேராசிரியர் ஏ.எல்.திபாவி

3. தேசியவாத ஏகாதிபத்திய வாதங்களின்
பெண்ணிலைவாத முரண்பாடுகள் 16
கலாநிதி செல்வி திருச்சந்திரன்

4. பண்பாட்டறிவும் 25
பண்பாட்டுணர்வும் .......
பேராசிரியர் கே.சிவத்தம்பி

5. கல்வியும் சமூக மேம்பாடும் 27
பேராசிரியர் எஸ். சந்திரசேகரன்

6. சுதந்திரம் என்றொரு சொல்! 34
சு.வில்வரெத்தினம்

7. சுதந்திரத்தின் 50 வருடத் தோல்வி 39
வி.ரி.தமிழ்மாறன்

8 அக்குனிக்குஞ்சு 44
மு.பொன்னம்பலம்

9. ஒரு மனிதனுக்கு மானுடத்தின் அஞ்சலி!! 48
அநேகா இளங்கோவன்






படிப்பகம்

padippakam

# மனக்கேடு

எஸ்.ரஞ்சகுமார்

அப்பு மகா ரௌத்ரம். பேய்க்கோபம் வரும். அந்த வேளைகளில் கையிலகப்பட்டதை எடுத்துச் சாத்தி விடுவார். ஆனால் மாமாவின் நல்ல காலமோ என்னவோ, அப்புவின் கையில் அகப்பட்ட பூவரசங் கொட்டன் கனநாட்களாக மழையில் நனைந்தும், வெயிலில் வாடியும், உக்கி உளுத்துப் போயிருந்தது. இரண்டு விளாசல்களுடன் 'சடார்' என்று முறிந்து விட்டது. அப்பு கோபம் கட்டுக்கடங்காமல் வானத்துக்கும் பூமிக்குமாக மேலும் துள்ளினார்.

"வடுவா ... கொண்டு போடுவன் . . கவனம்!" என்று மாமாவுக்கு உதடுகள் பதற பல்லை நெறுமிக் கொண்டு பத்திரம் காட்டினார். பிறகு விடுவிடென வெளியே போனார். கள்ளுக்குத்தான்!.

மாமா, பென்னம்பெரிய 'கெற்றபோல்' மாதிரி கிளைவிட்டிருந்த முதிய பூவரச மரத்தில் கொஞ்சநேரம் சாய்ந்து கொண்டு நின்றார்.

வேறொன்றுமில்லை! செல்லக்கண்டுவும் மாமாவும் சைக்கிளில் டபிள் அடித்துக் கொண்டு படத்துக்குப் போனார்களாம்! போதாக்குறைக்கு செல்லக்கண்டுவை மாமா "சீனிவாசு ...சீனிவாசு.. " என்று விளித்துக் கொண்டே போனாராம்! செல்லக்கண்டுவும் மாமாவை "சுந்தரம். . சுந்தரம் . . ." என்று பெயர் சொல்லிச் சொல்லிக் கதைத்ததாம்! அத்துடன் அவர்கள் "கொமினிசு"களாம்! சாதி பார்க்க மாட்டார்களாம்!

இவையெல்லாம் அப்புவின் காதுக்கு எட்டிய பிறகு தான் அடி விழுந்தது மாமாவுக்கு.

செல்லக்கண்டு தனது பெயரை சீனிவாசகம் என்று மாற்றிய பிறகும் எங்களுக்கெல்லாம் செல்லக்கண்டு தான். அப்புவுக்கு "செல்லன்" தான்! செல்லக்கண்டு மாமாவுடன் சின்ன வயதிலிருந்தே படித்தது. செல்லக் கண்டுவின் தகப்பனாருக்கு அப்புவின் ஒத்த பிராயம். ஆனால் அப்பு படித்த மூன்றாம் வகுப்பைக்கூட அதனால் படித்திருக்க முடியவில்லை. என்னதான் அப்பு வயலிலும், தோட்டத்திலும் உடம்பு முறிய வேலை செய்தாலும் அப்புவுக்கு செல்லக்கண்டுவின் தகப்பனாரின் உடல் உரம் வராது. அடிக்கடி நாரிப்பிடிப்பு என்று படுத்துக் கொள்வார்.

அந்நாட்களில் அவருக்கு உள்ளுக்கும், வெளிக்கும் நல்ல சீல் சாராயம்தான் மருந்து. அந்நேரங்களில், வெளி விறாந்தையில் கட்டிலைப் போட்டுப் படுத்துக் கொண்டே எங்களையெல்லாம் "அங்கே போடா . . . அதைச்செய்யடா" என விரட்டியடிப்பதுதான் அவரது முக்கிய தொழில். முகட்டு வளையிலிருந்து தூங்குகின்ற தேடா



படிப்பகம்

padippakam

வளையக் கயிற்றை பிடித்துத்தான் எழுந்து உட்கார வேண்டும்.

அப்போதெல்லாம் மாலை மங்கிய பிறகு, எங்களது பனைகளில் சீவலை முடித்த பிறகு, நான்கைந்து ஓலைகளைத் தலையில் சுமந்து கொண்டு, நடக்கும் இலயத்துக்கேற்ப அவ்வோலைகளின் சதங்கைச் சத்தம் கிண்ணிட எழ, இயனக் கூட்டினுள் பாளைக்கத்தியும் இன்னபிறவும் "கிலுக் கிலுக்" கென்று தாளமிட, உடலில் கள்வாடை வீச அப்புவைத் தேடி செல்லக்கண்டுவின் தகப்பன் வரும்.

"ஓஹோ. . ஆழ்வாப்பிள்ளே! வாரும்" என்று வரவேற்பார் அப்பு நக்கலாக.

ஆனால் நாங்கள் ஆழ்வான் என்றுதான் சொல்வோம். அப்படிப் பழகிவிட்டது. காண்கிற நேரமெல்லாம் "ஆழ்வான் நொங்கு வெட்டித் தாறியா!" என்று கேட்போம். நெடிதுயர்ந்த அந்த உருவம் சிறிது திரும்பும். இயனக் கூட்டினுள் இருந்து 'சிவுக்'கென பாளைக் கத்தியை உருவும். எங்களை நோக்கி பத்திரம் காட்டும். நாங்கள் கூக்குரலிட்டபடி ஓடுவோம்.அது தன் பாட்டுக்குச் சிரித்தபடியே போகும். ஏத்தனை தரம் செய்தாலும் சலிக்காத விளையாட்டிது அதற்கு. எங்களுக்கும்தான்! .

அப்புவின் வடக்கன்களுக்காக ஓலை வெட்டிக் கொண்டு வந்து, அவரது நக்கல் கதைகளையும் கேட்டுக் கொண்டு, சில வேளைகளில் அப்புவிடம் செல்லமாக தனகிக் கொண்டு, அந்த ஓலைகளை முற்றத்திலிருந்து 'சரார், சரார்' என ஒலியெழுப்பக் கிழித்துப் போடும் ஆழ்வான்: எங்களுக்காக நொங்கு வெட்டித்தந்தது மிக அபூர்வமே. பசுக்கள் கன்று ஈன்று பால் தரும் சமயங்களில், "ஆழ்வான் .. .. சேர்வை வேணும்" என்று அப்புவின் உத்தரவு கிடைத்தால் மட்டுமே நொங்குக் குலைகள் வரும். அதுவும் சீக்காய் பருவத்தில்!! .

செல்லக்கண்டு அப்படியல்ல. சமயங்களில் ஆழ்வானுக்கு பதிலாக செல்லக்கண்டு சீவலுக்கு வரும். அந்த நாட்களில் எங்களுக்கு ஒரே குஷி. பனைகளுக் குள்தான் நாங்களும் நிற்போம். அப்போ செல்லக்கண்டு இயனக்கூடு எல்லாம் கட்டுவது கிடையாது. சாரனை நன்கு மடித்து வரிந்து கட்டிக் கொண்டே, இரண்டே தாவலில் வட்டுமிதந்து விடும். எங்களை நோக்கி எச்சரிக்கை செய்யும்.

'அப்பன் .. .. .. தள்ளி நிக்க வேணும். பனைக்குக் கீழை நிற்கக் கூடாது. .."

"டொக் டொக்" என செல்லக்கண்டு பாளை தட்டுகின்ற சத்தம் கேட்கும்.' 'சரால் சரால்" என ஓலை வெட்டுகின்ற சத்தமும் கேட்கும். எங்களுக்கோ பொறுமை பறக்கும். பிறகு இரண்டொரு நொங்குக் குலைகளும் விழும். எல்லா நொங்கும் பதமாக, அமிர்தம் போல இருக்கும். ஒரு அணில் கோதல்



படிப்பகம்

காணக்கிடைக்காது. மாமாவின் சினேகிதத்தால் எங்களுக்கு கிடைத்த சலுகை இது.

அப்புவுக்குத் தெரிந்தால் துள்ளுவார்தான்! அவரது பனங்காய்கள் பாழாகிவிடுகின்ற வருத்தம் அவருக்கு.

செல்லக்கண்டுவும் ஓலை கிழித்துக் கொடுப்பது உண்டு. அந்த நாட்களில் மாமாவும் இருப்பார்.ஒரே றேடியோப் பாட்டும் .. . கதையும், சிரிப்பும்தான்!. நாங்கள் கூட அந்நாட்களில் வேலை செய்வோம். செல்லக்கண்டுவும், மாமாவும் பெரிய பெரிய சட்டங்களாக கிழித்து வைக்கும் ஓலையை அடுக்கி கட்டுவதும், அவற்றை சத்தகக் காம்பால் கிழித்து, தும்பாக்கி மாடுகளுக்கு போடு வதும் எங்களது வேலை. அந்த சமயத்தில் அப்பு இல்லாவிட்டால் இன்னும் குஷி. செல்லக்கண்டு பாடும். கணீரென்ற வெண்கலக்குரல் செல்லக்கண்டுவுக்கு.

எனக்கு கோழி இறைச்சி என்றால் கொள்ளை ஆசை. எங்களுக்கு கோழி உரித்துத் தருவது செல்லக்கண்டுதான். மேய்ந்துகொண்டு திரிகின்ற, ஒருவருஷம் நிறைந்து முற்றித் தினவெடுக்கும் சேவலை ஒரே எறியில் அது எறிந்து விழுத்துவதே பெரிய கலை.அதிகம் துடிக்க வைக்காமல் ஒரே தடவையில் அதன் கழுத்தை செல்லக்கண்டு முறிக்கும். செட்டை உரிப்பதில் வெகுலாவகம். துப்பரவு. நான் மண் சட்டியை ஏந்தியபடி நிற்க, கோழி இறைச்சியை 'ணங்' என சட்டியில் ஓசையெழ வெட்டி வெட்டி போடும். நெஞ்சுப் பகுதியைச் சட்டிக்குள் இடும்போது இரத்தத் துளிகள் சில என் கரத்திலும் தெறிக்கும். சட்டிக்குள் "சிலுசிலு" வென்று இரத்தம் ஊறிவரும்.

அன்றைய இரவில் செல்லக்கண்டுவும் எங்கள் வீட்டின் முற்றத்தில் சப்பாணி கொட்டி இருந்து கொண்டு இறைச்சிக் கறியை ருசித்துச் சாப்பிடும்.

ஆழ்வான் வரும் நாட்களில் எங்களுக்கு அவ்வளவு விசேஷமில்லை. அப்புவிடம் தான அதுக்குக் கதை.

"நயினார் வர வர வயக்கெட்டுப் போகுதாக்கும!"

இப்படித்தான் போகும் அவர்களது கதை. பக்கத்துக் கோயில் கொடியேறுகின்ற காலத்தில் அப்பு கேட்பார்."ஆரொ நல்ல பிரசங்கியார் வாறாராம்.வாறியோ ஆழ்வார்ப்பிள்ளே!"

அப்புவின் பேச்சுக்கு மறுபேச்சு ஏது? அவர்கள் பிரசங்கம் கேட்க ஒன்றாகப் போவார்கள். நாங்களும் பின்னால் இழுபடுவோம்.போகிற வழியில் ஊர்க்கதைகளும் .. .. பழமொழிகளும் .. .. பழைய பிரலாபங்களும் .. ..

"ஆனை இருந்து அரசாண்ட வீட்டிலை .. .. பூனையிருந்து புழுங்குவதேன்"

என்று இருந்தாற்போல் எதையோ நினைத்துக் கொண்டு ஆழ்வான் ஏங்கும்.

"அது சரி" என்று பலமாக ஆமோதிப்பார் அப்பு. எதையோ ஞாபகப்படுத்திக் கொண்டு.

அவர்களும் சிநேகிதர்கள் தான்!.

எங்களுக்கோ "இதேதுடா இது" என்று வெறுத்துப் போகும். கோயில் கிட்ட வரவர ஆழ்வானுக்கும் எங்களுக்கும் இடையே நெருக்கம் குறையும். கதையும் குறையும். ஆழ்வான் ஒதுங்கிப் போய் உட்கார்ந்து கொள்ளும். திரும்பி வரும்போதும் ஆழ்வான் எங்களுடன் வந்து கொண்டிருப்பதை நித்திரை வழியும் கண்களால் காண்போம்.

அப்புவின் அதிகாரம் தூள் பறப்பது வயல் வேலை மும்முரமாக நடக்கும் நாட்களில் தான். விடியற் காலையிலிருந்து அப்புவும், மாமாவும், ஆழ்வானும், செல்லக்கண்டுவும் வயலுக்குள்தான். சாப்பாடும், தேனீரும், வெற்றிலைப்பாக்கும் கொண்டு ஓடியோடி அலுத்துப் போகும் எங்களுக்கு.

குடலை ஈன்று மணிகள் பால் பிடிக்கும் காலத்திலிருந்து, அரிவி வெட்டி சூடும் பொலியும் வீடுவநடது சேரும் வரையும் ஆழ்வான் வயலுக்குள் காவல்.

அக்காலத்தில் ஒரு நாளில், வட்ட வடிவான ஒரு சிறு குடிலை முதுகில் சுமந்து கொண்டு வயல் நோக்கி ஆழ்வான் மிதந்து செல்லும். காற்று குடிலையும், ஆழ்வானையும் ஒன்றாகச் சேர்த்துத் தூக்கி கடாச எத்தனிக்கும். நன்கு குனிந்து எதிர்க் காற்றுக்கு தாக்குப் பிடித்துக் கொண்டு ஆழ்வான் குடுகுடென விரைந்து செல்லும் அழகை தூரே நின்று பார்க்க வேண்டும். பென்னாம் பெரிய குடையொன்று கால் முளைத்து மரகத வெளியில் நடந்து செல்வது போல இருக்கும்.

பகல் நேரங்களிலேயே வயல் மோகினி மாதிரி அழகு சொட்டும். பயமும் பக்தியும் கொள்ள வைக்கும் அழகு அது. பயிர்களின் கேசத்தை காற்று வருடிச் சென்று பச்சை அலைகளாய் நெளியும். ஒரே பெரு வெளி. இடையிடையே இரண்டொரு மரங்கள் கடலில் குளிக்கின்ற சில கன்னிகள் போலத் தெரியும். தனித்துப் போன சில பறவைகள் வரம்புகளில் சோம்பித் தூங்கி வழியும். எந்நேரத்திலும் வரம்புகளில் பாம்புகள் தலை காட்டக் கூடும். இரவு கூடிவரும் போது இவையெல்லாம் மறைந்து தனியொரு மோகினி அசைவற்று துயில் கொள்வது போல காட்சி தரும் வயலின் மடியில் ஊதல் காற்றும் மழையும் ஒரு பிடி பிடி பிடிக்கும். தனது குடிலுக்குள் கால்களை சாக்கினுள் நுழைத்துக் கொண்டே ஆழ்வான் குன்றிக் குறாவிக் கொள்ளும். இடையிடையே தூக்கத்தைப் போக்கவும் பயத்தைப் போக்கவுமாக அது வைக்கின்ற குரல்கள் பயிர்களின் மேல் பாய்ந்து செல்லும்.

அரிவி வெட்டி, மாடுகள் முக்கித் தக்கி இழுக்க சூடும் பொலியுமாக விளைச்சல் வீடுவந்து சேருகின்ற அந்த நாளில் மட்டுமே, ஆழ்வான எங்கள் வீட்டினுள் தாயறை வரைக்கும் நுழையும் சந்தர்ப்பம் கிடைக்கும். பொலியை முதுகில் சுமந்து கொண்டு அந்த அறையினுள் சென்று அடுக்கிவிட்டு கண்களால் பொலியை மேய்ந்து, தரையில் விழுந்து வணங்கி விட்டு வரும். பிறகு அப்பு குல்லக் கணக்கில் தனது சாக்கினுள் அளந்து போடும் நெல்லை தூக்கி கொண்டு போகும்.

இவ்வாறு உழைத்து உழைத்து தான் ஆழ்வான் கிழவனாகிப் போனது. அப்புவும் வெளி விறாந்தைக் கட்டிலில் அதிகாரக்குரலும் கிழவயதுக் காய்ச்சலுமாக ஆகிப்போனார். அவர்கள் வயலுக்குப் போகும் நாட்கள் குறைந்தன. எங்களது வேலைகள் மிகுந்தன.

அந்நாட்களில் ஆழ்வான் தினமும் முன்னிரவு நேரங்களில் அப்புவைத் தேடி வரும். அவர்களது கதை தொடரும்.

"நயினார் நல்லா வயக்கெட்டுப் போச்சுதாக்கும்.. .."

ஆழ்வானின் வேலைகளில் பெரும்பகுதி செல்லக்கண்டுவின் தோள்களில் விழுந்தன. செல்லக்கண்டுவும் மாய்ந்து மாய்ந்து வேலை செய்ததுதான். என்றாலும் அப்புவின் அபிப்பிராயம் மாறவில்லை!

"உவன்.. ..தேப்பனைப் போல வரான்.. .." என்பார் உதட்டைச் சுளித்துக் கொண்டு.

செல்லக்கண்டு இயனக்கூடு கட்டிக் கொண்டது. ஆனாலும் நிமிர்ந்து தான் நடந்தது. ஒருநாள் தன்னிலும் அப்புவை "நயினார்" என்று அது கூப்பிட்டதாக நான் கேட்டதில்லை.

"வேலை எல்லாம் முடிஞ்சுது. நான் வரட்டே " என்று மொட்டையாக முற்றத்தில் நின்று அப்புவிடம் கேட்கும்.

மாமாவுடன் சைக்கிளில் டபிள் அடித்துக் கொண்டு படம் பார்க்கப் போன நாட்கள் மறைந்து விட்டன. அத்துடன் செல்லக்கண்டுவுக்கு நிறையக் குழந்தைகளும் பிறந்து விட்டன. நிறைய வேலைகளும் இருந்தன.

ஒரு நாள் நல்ல நிலவு. செல்லக்கண்டு முற்றத்தில் இருந்து ஓலை கிழித்துக் கொண்டு அப்புவிடம் பேச்சுக் கொடுத்தது.

"வரவர பெரிய கஸ்டமாக கிடக்கு.. .."

".. .. .. .. .. .. .."

"வயல் வேலைக்கு இனியும் நெல்லு வாங்கிக் கட்டுபடியாகுதில்லை"

"ஹூம்" உறுமினார் அப்பு!
"காசாய்த் தரவேணும்"

அவ்வளவுதான்! அப்புவின் ரௌத்ரம் பொங்கி விட்டது. அவரது கையில் அகப்பட்டது எதுவோ, சரியாக ஞாபகமில்லை.

"எளிய வடுவா.... ஆரிட்டை என்ன கதைக்கிறாய்"

என்று உறுமியபடி செல்லக்கண்டுவை நோக்கி ஓங்கி வீசினார். செல்லக்கண்டு முகத்தைப் பொத்திக் கொண்டு குனிந்தது.வாயிலிருந்து கசிந்த இரத்தத்தையும் எச்சிலையும் துப்பியது. துப்பத் துப்ப இரத்தம் கொப்பளித்தது.

செல்லக்கண்டு நிமிர்ந்தது. அது அப்புவைப் பார்க்கவில்லை. ஆனால் எங்களை எல்லாம் பார்த்தது. அடிபட்ட புலியின் பார்வை அது!. ஆனால் பேசாமல் வீட்டைவிட்டு வெளியே போனது. மாமாவுக்காக, தங்களது சிநேகி தத்துக்காக அப்படிப் போயிருக்கலாம்!

பிறகு செல்லக்கண்டு வரவேயில்லை. ஆழ்வானும் வரவில்லை. ஆனால் வயல் வேலைகள் வழக்கம் போல் வந்தன. அப்பு கட்டிலிலிருந்து இறங்கினார். என்னை நோக்கி "வா தம்பி வயலுக்கு" என்றார்.

போகும் வழியில் என்னிடம் சொன்னார். "எல்லாம் பழக வேணும் .. .."

".. .. .. .."

"சித்திரமும் கைப்பழக்கம். செந்தமிழும் நாப்பழக்கம்.. .. தெரியுமோடா?" என்று குரல் இடறியது.

".. .. .. .."

காலம் மாறிப் போச்சுதடா!" அவரது குரல் கம்மியது.

பள்ளிக் கூடத்தையும், வயலையும், வீட்டு வேலைகளையும் ஒன்றாகக் கவனித்துச் சமாளிப்பது எனக்குப் கஷ்டமாக இருந்தது. செல்லக்கண்டு வர மாட்டானா என்று ஏங்கத் தொடங்கினேன். ஆனால் செல்லக்கண்டு வரவேயில்லை.

நீண்ட மூங்கில் தடியில் சத்தகக் கத்தியை கட்டி உயரம் குறைந்த வடலிகளில் பின்னேரங்களில் அப்பு ஓலை வெட்டினார். முன்னிரவுகளில் பெரும்பகுதி ஓலை கிழிப்பதில் செலவாகியது எனக்கு.

வயல் விதைப்பு நாட்களிலே முதுகு 'விண் விண்' ணெனத் தெறித்தது. கைகளில் கொப்புளம் போட்டு நீர்கட்டி விட்டது. ஆண்டாண்டு காலங்களாக செல்லக்கண்டுவின் முன்னோர்களின் இதயத்திலும் விழியோரங்களிலும் கட்டிக்கிடந்த நீரைப்போல அது பெரு வேதனை தந்தது. எனினும் நாங்கள் தொடர்ந்து வேலைசெய்ய நேர்ந்தது.

கதிர்கள் முற்றிப் பால் பிடித்து விட்டன. காவலுக்கு யாருமில்லை. எங்களால் இரவு பூரா வயல்வெளியில் அலைந்து திரிய முடியவில்லை. சமயா சமயங்களில் அப்புவும் நானும் நடுநிசி வேளைகளில் வயலுக்கு ஒரு தரம் போவோம்.

குளிருக்கு இதமாக போர்த்துக் கொண்டு அப்பு நடப்பார். எத்தனை நாட்கள் வரம்புகள் மீது இருளில் தடுக்கி அப்பு தடுமாறினார் என்று ஞாபகமில்லை.

விரைவில் அவரைக் காய்ச்சல் பிடித்துக் கொண்டது. சரியான காய்ச்சல். வழக்கம்போல் அவருக்கு சாராயமும் கோழிக் கறியும் தான் மருந்து.

என்னால் செல்லக்கண்டுவைப் போல, ஒரே எறியில் சேவலை விழுத்த முடியவில்லை. வளவெங்கும் நான் துரத்தத் துரத்த அது ' குய்யோ.. ..முறையோ .. ..' என்று கத்தி என் மானத்தை வாங்கிவிட்டது. போதாக்குறைக்கு பெண்கள் எல்லாம் எட்டிப் பார்த்து, "கோழி பிடிக்க முடியாத வீரனை" எண்ணி கொடுப்புக்குள் சிரிப்பதாகப்பட்டது.

நெடுநேரம் ஓடியோடி சேவல் களைத்து விட்டது. கோழியைவிட நான் களைத்துப்போய் மூச்சு வாங்கினேன். கழுத்தை முறிக்கும் உத்தி எனக்குத் தெரியவில்லை. பனம் நாரில், சுருக்கிட்டு அதன் கழுத்தில் மாட்டி வசதியான பூவரசங் கிளையில் தொங்கவிட்டேன். அந்த ஜீவன் இறக்கைகளைப் போட்டு நெடுநேரம் அடித்தது. தண்ணீராக எச்சமிட்டு, இடத்தை எல்லாம் நாற அடித்தது. எனது இந்த அவஸ்தையில் பாதி போயே விட்டது.

கத்தியைப் பிடித்திருந்த எனது கை நடுங்கியது. இறக்கைகளைப் பிய்க்கையில் அதன் பூஞ்சிறகுகள் என் நாசியினுள் புகுந்தன. நான் தும்மினேன். தும்மலின் அவஸ்தையில் முகத்தைப் பொத்தினேன். பச்சை மாமிச மணம் வயிற்றைப் புரட்டியது.

ஒருவாறு வெட்ட ஆரம்பித்தேன். கால்களையும் இறக்கைகளையும் முதலில் இடுங்கி அகற்றுவதற்குப் பதிலாக மடத்தனமாக நெஞ்சைக் கீறிவிட்டேன். இரத்தம் கொப்பளித்தது. என் மார்பெங்கும் இரத்தம். கரங்கள் வழியே சூடான கோழி இரத்தம் வீச்சத்துடன் இறங்கி முழங்கைகள் வழியே வழிய ஆரம்பித்தது. பிசுபிசுவென ஒட்டியது.

இறைச்சித் துண்டங்களைச் சட்டியில் போடும்போது 'ணங்' என ஓசை எழுந்தது. அப்பு செல்லக்கண்டுவை நோக்கி எதையோ வீசி எறிந்த போது ஏற்பட்ட அதே ஒலி.

சட்டிக்குள் இரத்தம் ஊறிக் கொண்டிருந்தது. செல்லக்கண்டு வின் முரசுகளிலிருந்து இரத்தம் கசிவது போல இருந்தது எனக்கு.

செத்துப்போன கோழியின் தலை மட்டும் நார் சுருக்கினுள் அகப்பட்டு பூவரசங் கிளையில் தொங்கிக் கொண்டிருந்தது. ஜீவனற்ற அதன் வட்ட வடிவான கண்கள் சூனியத்தில் நிலைத்திருந்தன.

அன்றைக்கு என்னால் கோழி இறைச்சியை உண்ண முடியவில்லை. அன்று மட்டுமல்ல, அதற்குப் பிறகும் நான் கோழி இறைச்சியைத் தொடுவதே இல்லை.



padippakam

# இஸ்லாத்தில் கல்வி ஒரு வரலாற்று நோக்கு

பேராசிரியர் ஏ. எல். திபாவி

உலகளாவிய ரீதியில் ஒரு மகத்தான அறிவியல் மறுமலர்ச்சிக்கு வழி வகுத்த இஸ்லாமியக் கல்வியின் தோற்றுவாய், எழுத்துருப் பெறாமல் வாய்மூல மரபாக இருந்த பண்டைய அறபு நாகரீகத்திலிருந்து ஊற்றெடுக்கிறது. மானிட வர்க்கத்தின் பண்பாட்டு வளர்ச்சியிலிருந்து சேய்மையில் காணப்பட்ட இந்த நாகரீகத்தை மனித வாழ்விற்கு இசைவானதாக ஆக்கிய பெருமை குர்ஆனுக்கும் சுன்னாவிற்கும் உரியது. இவை இரண்டும் வகுத்த வழியில் இஸ்லாமிய வரலாறு மகத்தான பல வளர்ச்சிப் படிகளைக் கண்டுள்ளது. இந்த வகையில், இஸ்லாமிய அறிவியல் வரலாற்றில் அடையாளமிட்டுக் காட்டக் கூடிய சில கட்டங்களை நோக்குவது சிறந்ததாகும்.

இஸ்லாமியக் கல்விப் பாரம்பரியத்திற்கு அடித்தளமிட்டவர் எழுத வாசிக்கத் தெரியாத ஒரு மனிதர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இஸ்லாமியக் கல்வியின் உருவாக்கம் 'வஹி'யுடன் ஆரம்பமாகின்றது. வஹியின் ஆரம்பமே "வாசிப்பீராக" என்று கல்வியின் அவசியத்தை உணர்த்துவதாக அமைகிறது. நபிகளார் தனக்கு ஓதத் தெரியாது என்று கூறியபோது மீண்டும் வானவர் ஜிப்ரீல் "நீர் உமது இறைவனின் பெயரைக் கொண்டு ஓதுவீராக் அவன் தான் மனிதன் அறியாதவற்றையெல்லாம் அவனுக்குக் கற்றுக் கொடுத்தான்" என்றார்.

முஹம்மத் (ஸல்) அவர்கள் மக்காவில் கண்ணியமானதொரு குடும்பத்தில் பிறந்தார்கள். இவ்வாறான கண்ணியமிக்க குடும்பங்களிலேதான் எழுதப் படிக்கத் தெரிந்த மனிதர்கள் காணப்பட்டனர். என்றாலும் எழுத்தறிவின்மை அறேபியா எங்கும் பரந்து காணப்பட்டது. எழுத வாசிக்கத் தெரிந்த ஒரு சில மனிதர்கள் நகரங்களிலும் சிறிய குடியிருப்புக்களிலும் வாழ்ந்தனர். மக்காவின் வியாபாரிகள் ஏனைய வியாபாரிகளைச் சந்தித்த போது, அவர்கள் ஓரளவாவது எழுத வாசிக்கத் தெரிந்தவர்களாகக் காணப்பட்டனர். இஸ்லாத்தை ஆரம்பத்தில் தழுவிய மனிதர்களுள் எழுத வாசிக்கத் தெரிந்தவர்களும் இருந்தனர். இவர்களில் சிலர் நபிகளாரது காலத்தில் வஹியை எழுதக் கூடியவர்களாகவும், பிற்காலத்தில் இஸ்லாமிய சாம்ராச்சியத்தின் சிரேஷ்ட அதிகாரிகளாகவும் விளங்கினர்.

இஸ்லாத்தின் தோற்றத்திற்கு முன்னர் அறபு மொழியிலான ஆக்கங்கள் அனைத்தும் வாய்மூலங்களாகவே அமைந்திருந்தன. அறேபியரின்



படிப்பகம்

வளம்மிக்க கவிதைகளும் வாய்மொழி மூலமாகவே பரிமாறப்பட்டன. ஒருவன் கவிஞனாகக் கணிக்கப்படுவதற்கும், அவன் தனது கவிதைகளைப் பாடுவதற்கும் சில தகைமைகள் கொண்டிருக்க வேண்டுமென்ற அவசியம் இருக்கவில்லை.

எழுத்தறிவற்ற, வாய்மூல மரபுகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு சூழலில் அல்குர்ஆன் அருளப்பட்டது. அது கல்வி கற்பதன் மகத்துவத்தைக் கூறுகின்ற அதே வேளை, அறிவியல் அம்சங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. அறிவுள்ள மனிதர்கள் நபிமார்களின் வாரிசுகளாகக் கருதப்படுகின்றனர். குர்ஆனுக்கு வியாக்கியானம் செய்யும் பணியை நபிகளாரே ஆரம்பித்து வைத்தார்கள். முஹம்மத் (ஸல்) அவர்கள் தமது போதனையின் மூலம் மக்களிடமிருந்து உலகியல் இலாபங்களை எதிர்பார்க்கவில்லை. மாறாக அல்லாஹ்வின் திருப்தியை மட்டுமே எதிர்பார்த்தார்கள்.

நபியவர்கள் தமது பிரசாரத்தின் போது, சமூகத்தின் எதிர்கால நடவடிக்கைகள் பற்றியும் வஹியின் விளக்கங்கள் பற்றியும் தெளிவாக எடுத்துரைத்தார்கள். நபியவர்களின் சன்மார்க்கப் போதனையானது எப்பொழுதும் கல்வியின் முக்கியத்துவத்துடன் தொடர்புபடுகின்ற விடயங்களை உள்ளடக்கியதாகவே காணப்பட்டது. கல்வியறிவுள்ளோர் கல்வியறிவற்றோருக்குக் கற்பிக்குமாறு பணிக்கப்பட்டனர். புதிதாக இஸ்லாத்தைத் தழுவிய சமூகத்தனருக்குப் போதனை செய்ய கல்வியறிவுள்ளவர்கள் மாத்திரம் அனுப்பி வைக்கப்பட்டனர். அத்தகைய மனிதர்களே வணக்க ஸ்தலங்களில் இடம் பெற்ற போதனா கூடங்களின் ஆசிரியர்களாகப் பணிபுரிய அனுமதிக்கப்பட்டனர். பள்ளிவாயல்களே இஸ்லாத்தின் ஆரம்பக் கல்விப்பாசறைகளாகத் திகழ்ந்தன. அத்தோடு குர்ஆனே முதற் பாட நூலாகவும் அமைந்தது.

கல்வியின் மூலஸ்தானங்களாகப் பள்ளிவாயல்கள் இருந்தமை, வரலாறு முழுவதும் கல்வியின் சிறப்பு தொடர்ந்திருப்பதற்குக் காரணமாக அமைந்ததெனலாம். அப்பள்ளிவாயல்கள் சமூக நடவடிக்கைகளைப் பிரதிபலித்துக் காட்டும் முக்கிய தலங்களாகக் காணப்பட்ட அதேவேளை, நீதிமன்றங்களாகவும் செயற்பட்டன. மார்க்கப் போதனைகளும் அரச கொள்கைகளும் கூட அங்கு விளக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். அப்பள்ளிவாயல்களிலே அறிஞர்களும் பிரசாரகர்களும் அமர்ந்திருக்க, அவர்களிடமிருந்து அறிவு பெறும் நோக்கில் மனிதர்கள் சிறியவர், பெரியவர் என்ற பாகுபாடின்றி அறிவுத் தாகத்தோடு சென்றனர்.

நபிகளாருடன் இணைந்து போதனைகளில் ஈடுபட்ட ஆசான்கள், நபிகளாரைப்

padippakam

போலவே எவ்வித வேதனமும் பெறாமல் தமது பணிகளை மேற்கொண்டனர். நபிகளாரின் காலத்திற்குப் பின்னர் அவர்கள் ஒரு தார்மீக சமுதாயத்திற்கான திட்டங்களை வகுக்கக் கூடியவர்களாக மாறினார்கள். அச்சமூகத்தின் அங்கத்தவர்களும் தலைவர்களும் போதகர்களும் 'அச்சமூகத்தின் முன்னேற்றத்திற்காகத் தங்களை அர்ப்பணித்தவர்களாக இருந்தனர்.

பிற்காலத்தில் குர்ஆனுக்கு விளக்கமாக அமைந்த நபிகளாரின் சுன்னாவை அவர்கள் தொகுத்தனர். கல்வியின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்ற விதத்தில் சுன்னா அமைந்திருப்பதற்கு, தக்க சான்றுகளாகக் கீழ்வரும் நபிவாக்குகளைக் குறிப்பிடலாம்:

"கல்வியைக் கற்றுக் கொள்வது முஸ்லிமான ஆண் பெண் இருபாலார் மீதும் கடமையாகும்"

"அறிவைத் தேடுகின்ற ஒருவனது நன்னோக்கத்தைப் பொருந்திக் கொண்டதற்கு அடையாளமாக வானவர்கள் தங்களுடைய இறக்கைகளை அவன் மீது விரிக்கின்றார்கள்".

ஆரம்ப காலத்தில் குர்ஆன், ஹதீஸ் போன்ற துறைகளை ஆழமாகக் கற்றவர்கள் அரேபியத் தீபகற்பத்தை விட்டும் வெளியேறவில்லை. ஆனால், பிற்காலத்தில் அவர்கள் தீபகற்பத்தினை விட்டும் வெளியே சென்று அறிவுப்பணியைத் தொடர்ந்தார்கள். அவர்களுட் பலர் ஈராக்கிலும், இன்னும் சிலர் சிரியா, எகிப்து போன்ற நாடுகளிலும் வாழ்ந்து வந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

சரியான முறையில் குர்ஆனை ஓதுவது பற்றிய அறிவைப் பெற்றுக் கொள்வதற்கும் ஹதீஸ்களை இனங்கண்டு கொள்வதற்கும் விரும்பியவர்கள் தூர இடங்களுக்குப் பிரயாணங்களை மேற்கொள்ள வேண்டிய அவசியம் அவ்வப்போது ஏற்பட்டது. இவ்வாறு கல்வி கற்றவர்களிடமிருந்து அறிவைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் ஈமானின் அடியாகவே தோன்றியது. இதன் நடைமுறைகளிற் சில முன்னைய அமைப்புக்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டன. இந்த அமைப்புக்கள் இஸ்லாமியக் கல்வி வரலாற்றில் மைல் கற்களாக விளங்குகின்றன.

ஆரம்ப காலங்களில், கல்வி கற்பவர்களிடம் விஷேட தகமைகள் காணப்பட வேண்டும் என்ற அவசியம் இருக்கவில்லை. ஆனால், பிற்காலத்தில் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. கல்வித் தகைமைகளை வேண்டி நிற்கின்ற ஒரு நிர்வாக முறையை முதன் முதலில் உமர் (றழி) அவர்கள் அறிமுகம் செய்தார்கள். உமர் (றழி) அவர்களின் கீழ்வரும் கூற்றானது இதற்குத்தக்க சான்றாக அமைகின்றது. அவர்கள்



படிப்பகம்

padippakam

தமது ஆட்சிக்காலத்தில் முஸ்லிம்களுக்குப் பின்வருமாறு கூறினார்கள்:

"நீங்கள் உங்கள் குழந்தைகளுக்கு நீச்சல், அம்பெய்தல், குதிரையேற்றம், கவிதை புனைதல் போன்ற பயிற்சிகளை வழங்குங்கள்".

ஒரு வரலாற்றாசிரியரின் கூற்றுப்படி, ஆரம்ப கால இஸ்லாமிய சமூகம் கல்விக்கெனத் தனியானதொரு அமைப்பை உருவாக்கவில்லை. இஸ்லாமிய அரசு சிறார்களுக்குக் கற்பிக்கின்ற போதனா ஆசிரியர்களுக்குத் தனியானதொரு கொடுப்பனவுத் தொகையை ஒதுக்கவுமில்லை. கல்வி கற்பவர்களே அதற்கான செலவினங்களை ஏற்க வேண்டியிருந்தது. இதனடியாகத்தான் தனிப்பட்ட ஆசிரியர்களின் விசேட வகுப்புக்கள் ஆரம்பமாயின.

இத்தகைய வகுப்புக்கள் முதலில் வீடுகளிலேயே நடத்தப்பட்டன. மாணவர்கள் தனிப்பட்ட முறையிலும், சிறுசிறு குழுக்களாகவும் அவ்வகுப்புக்களில் கலந்து கொண்டனர். மாணவர்களது கல்வி கற்க வேண்டுமென்ற ஆர்வமும் ஆசிரியரின் வருவாய் பெற வேண்டும் என்ற தேவையுமே இவ்விசேட வகுப்புக்கள் தொடர்ந்தும் நடப்பதற்கு உறுதுணையாய் அமைந்தன. கால ஓட்டத்தில் மாணவர்களின் தொகை பன்மடங்காகப் பெருக, அவர்களுக்கு வகுப்பு நடாத்துவதற்கென தனியானதொரு இடம் ஒதுக்கப்பட வேண்டிய தேவை ஏற்பட்டது. இவ்வாறு ஒதுக்கப்பட்ட இடங்கள் "அல்-மக்தப்" அல்லது "அல்-குத்தாப்" என்ற பெயர்களால் அழைக்கப்பட்டன. இஸ்லாமிய வரலாறு முழுவதிலும் இந்த இரண்டு வார்த்தைப் பிரயோகங்களும் மாறி மாறி உபயோகிக்கப்பட்டு வந்திருக்கின்றன. "எழுதுதல்" என்ற அறபு மொழியின் வினையடியிலிருந்தே இவ்விரு சொற்களும் தோற்றம் பெறுவதைக் காணலாம்.

இப்போதனா வகுப்புக்களில் கவிதையும் எழுத்தும் வாசிப்பும் எண்கணிதமும் பாடத்திட்டத்தின் முக்கிய கூறுகளாக அமைந்தன. பெண்களைவிட ஆண்களே அதிகம் அவ்வகுப்புக்களில் கலந்து கொண்டனர். குர்ஆனின் சிறிய அத்தியாயங்களை ஓதுதலும் சிறுசிறு கவிதை அடிகளை மனனம் இடுதலும் இவர்களது பாடவிதானங்களில் குறிப்பிடத்தக்கவையாகும்.

பிற்காலத்தில் இஸ்லாமிய அரச சேவையில் எழுத்தறிவு முக்கியதோர் இடத்தை வகித்தது. ஆரம்ப கால யூத, கிறிஸ்தவர்களின் மத நம்பிக்கைப்படி, அவர்களது நாட்டு நிருவாக விடயங்களில் ஈடுபடுபவர்கள் எழுத்தறிவை அடிப்படைத் தகுதியாகக் கொண்டிருந்தனர். இஸ்லாமியப் படைத் தளபதிகளினதும் நிருவாகத் தலைவர்களினதும் தஸ்தாவேஜுகள் அறபு மொழியில் மாத்திரம் காணப்படவில்லை. மாறாக, அந்தந்த நாட்டுக் குடிமக்களின் தாய் மொழியிலேயே அமைந்திருந்தன.


படிப்பகம்

padippakam

'கெய்ரோ'வைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்த சில கலீபாக்கள், தாங்கள் நபிமார்களின் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் என்று கூறினர். இவர்கள் தமது இந்த வாதத்தை நன்கு திட்டமிட்ட கல்விக் கொள்கையின் ஊடாகப் பலப்படுத்தினர். அத்தோடு அவர்கள் கெய்ரோவில் ஒரு பள்ளியையும் நிறுவினர். பிற்காலத்தில் இப்பள்ளிவாயல் 'அல்-அஸ்ஹர்' என அழைக்கப்படும் பாரியதொரு கல்விக் கூடமாக மாறியது. உலகின் முதலாவது பல்கலைக்கழகம் எனவும் இது கருதப்படுகிறது. இதன் மூலம் கெய்ரோவில் ஏற்பட்ட கல்வி மறுமலர்ச்சியினால் ஏற்கனவே பக்தாதிலிருந்த கல்வி முறைமை எவ்விதத்திலும் பாதிக்கப்படவில்லை. என்றாலும், கெய்ரோவிலும் பக்தாதிலும் கல்வி கற்ற மார்க்கப் போதகர்கள், நீதவான்கள், அரச உத்தியோகத்தர்கள் போன்றோரின் தேவை உணரப்பட்டது. இருந்த போதிலும் இவர்களை உருவாக்குகின்ற பணி தாமதமாகவே மேற்கொள்ளப்பட்டதெனலாம்.

இக்கால கட்டத்தில்தான் இஸ்லாமியக் கல்வி வரலாற்றில் ஒரு முக்கிய மாற்றம் இடம்பெற்றது. இஸ்லாமிய அரசு கல்வி நிலையங்களில் கற்பிக்கின்ற ஆசிரியர்களை அரசாங்க உத்தி யோகத்தர்களாகக் கணித்து அவர்களுக்கு வேதனம் வழங்கியதோடு, மாணவர்களுக்கு இலவசமாக உணவும் தங்குமிட வசதிகளையும் அளித்து, கல்வி கற்பதற்கான வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்தது. அத்துடன் கல்வி கற்பவர்களின் 'மத்ஹபு'களுக்கு ஏற்ப பாடத்திட்டங்களையும் வகுத்துக் கொடுத்தது. இப்பாடத்திட்டத்தில் மார்க்கக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருந்ததுடன் சட்டக்கலை, பண்டைய அறபு இலக்கியங்கள் போன்றவைகளும் போதிக்கப்பட்டன.

எனவே, வேத வெளிப்பாட்டோடு ஆரம்பமான கல்வி முயற்சி, குர்ஆன் சுன்னாவால் வளர்த்தெடுக்கப்பட்டுப் பிற்பட்ட காலங்களில் தனி மனிதர்களாலும் உத்தியோகபூர்வமற்ற அமைப்புக்களாலும் முன்னெடுத்துச் செல்லப்பட்டது. இஸ்லாமிய அரசு, வரலாறு நெடுகிலும் ஒரு சகட ஓட்டத்தில் சென்று கொண்டிருந்தாலும் கல்வித்துறையானது வேகமாக வளர்ச்சி பெற்றுக் கொண்டே வந்தது. இருண்டு போயிருந்த ஐரோப்பா விடியலைப் பற்றிச் சிந்திக்கத் தெரியாதிருந்த வேளை, இஸ்லாத்தினால் உருவாக்கப்பட்டு வளர்ந்து வந்த கல்விப்பணி, அறபு தேசத்தில் வானளாவ வளர்ந்து கொண்டிருந்தது. "அறபு நாட்டின் கல்வி முயற்சிகள் ஏற்படுத்திய சலசலப்பும் சந்தடியும் நீண்ட காலமாக ஐரோப்பாவிற்கு எட்டவேயில்லை" என்பது உலக வரலாறு சொல்லும் உண்மையாகும்.

தமிழில் :- றமாஸா றஸ்வி





படிப்பகம்

padippakam

# தேசியவாத ஏகாதிபத்திய வாதங்களின் பெண்நிலைவாத முரண்பாடுகள்

- கலாநிதி செல்வி திருச்சந்திரன்

பொதுவாக பெண்கள் ஒரே படிமத்தில் ஒரே தன்மைத் துடையவர்கள் எனக் கருதப்பட்டனர். இந்த படிமத்திற்குள்ளேயே அவர்கள் ஆய்வுக்கு உட்படுத்தப் பட்டனர். ஆய்வு முறைமைக்கு உட்பட்டு வந்தனர் என்றே கருதப்பட்டது. அதனால் அவர்கள் பற்றிய மேலெழுந்தவாரியான பொதுமைப்பட்ட கருத்துக்களை வைத்துக் கொண்டு அவர்கள் எல்லோரும் ஒரே மட்டத்தில் ஒரே தன்மைத்தாக இருப்பவர்கள் எனப் பிழையாக கணிக்கப்படுவது சகஜம். இது இனமையவாதக் கோணல் களுக்கும் இனவாதத்தை அடிப்படை யாகக் கொண்ட கருத்துக்களுக்கும் எம்மை இட்டுச் செல்கின்றது. இனமையவாதம் இனவாதத்திலிருந்து மாறுபட்டது. பெண்களின் கீழ்ப்பட்ட நிலை ஒவ்வொரு வர்க்கத்துக்கும், சாதிக்கும், இனத்துக்கும், சமயத்துக்கும், தேசியத்துக்கும் ஏற்ற முறையில் மாறுபட்டுக் கிடந்தது என்பதை இனமையவாதம் (Ethno-Centrism) காணத்தவறிற்று. இனமையவாதத்திற்கு இன்னொரு காரணமும் காட்டலாம். பிரச்சினைகளை ஆய்வாளர்கள் சமூக, பொருளாதார, அரசியல் என்று பரந்த பின்னணியில் வைத்துப் பார்க்காமல் தனிமைப்படுத்தி, ஒற்றையாகப் பார்க்கும் இயல்பு கொண்டவர்களை இப்போக்கு இனமையவாதத்திற்கு இட்டுச் சென்றுள்ளது. பெண்கள் எந்த இன, வர்க்க, மத, சாதிக்குரியவர்களானாலும் அவர்கள் ஒரேவித வகைத்தன்மைக்குள் இடப்படுவதன் காரணம் அவர்கள் உலகரீதியாக, ஆண்களுக்குக் கீழ்ப்பட்டே தமது பங்களிப்பைச் செய்கின்றனர் என்பதே. பெண்கள் இப்படி சகலவிதத்திலும் ஆண்களுக்குக் கீழ்ப்பட்டிருப்பதன் நிலையை அறிய வேண்டுமானால் இவற்றுக்குக் காரணமாய் உள்ள சாதனங்களை ஒரு முழுமையான ஆய்வுக்குட்படுத்த வேண்டும். அப்போ பெண்கள் எவ்வாறு ஒவ்வொன்றிலுமிருந்து பிரிக்கப்பட்டிருக் கிறார்கள் என்பது தெரியவரும்.

## தேசியப்பிரச்சினை

இக்கட்டுரையில் நான் பெண்கள் பிரச்சினையை தேசியப் பிரச்சினையோடு வைத்து ஆய்வு செய்ய முயன்றுள்ளேன். இச்சந்தர்ப்பத்தில் ஆட்சியாளர்களான ஏகாதிபத்தியவாதிகளதும் சகபிரஜை களான தேசியவாதிகளினதும் கருத்துக்கள் முரண்பாடு களைக் கொண்டிருந்தன. ஊசலாட்டநிலைகளும் பெண்களை எவ்வாறு எதிர் கொண்டன என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள



படிப்பகம்

padippakam

வேண்டும். இவற்றை நாம் விளக்குவதற்கு நாம் தேசிய வாதம் பற்றி முதலில் அறிய வேண்டும். தேசியம் பற்றிய விரிவான கோட்பாடுகளை ஒரு வரையறைக்குள் அடக்கி விட முடியாது. தேசியவாதத்தைப் புரிந்து கொள்வதற்கு நான்கு முக்கிய அடிப்படைகள் தேவை என ஒரு வாதம் உண்டு. அதாவது ஒரு இனத்துக்கென வரையறுக்கப்பட்ட நிலம் அதற்கென்ற பொருளாதார மையம், மொழி, அதற்கென்ற வரலாற்று ரீதியான பொது மனோநிலைகள் இதுவே ஒரு மக்கள் கூட்டத்தை ஒரு தேசிய அந்தஸ்துக்குரியதாக்குபவையாகும்.

தற்கால அரசியல் மொழி உருவாக்கத்தில் கலாச்சார அடையாளம் (Cultural identity) என்றும், பாரம்பரியமாக வாழ்ந்து வந்த நிலப்பரப்பு என்றும் (traditional home lands) கோட்பாட்டு ரீதியில் இதை விளங்கிக் கொள்ளலாம். இந்நான்கும் தர்க்கரீதியாக தேசிய இனம் ஒன்று உருவாவதற்கான அடிப்படைகள். இந்த நிலப்பரப்பில் இருப்பவர்களின் உரிமைகள் மறுக்கப்பட்டாலோ அன்றி அரச வன்முறைக்கு இராணுவ ரீதியாக உட்படுத்தப்பட்டாலோ அவர்கள் எதிர்ப்புத் தெரிவிக்க முனைவர். இப்படிப்பட்ட ஒடுக்க முறைகள் புரட்சியைத் தூண்டும் உணர்ச்சிகளுக்கு அடிகோலுகிறது. இதனால் மக்கள் கிளர்ந்தெழுந்து தங்கள் உரிமைகளுக்கு போராட எத்தனிப்பர்.

இங்கு பெனடிக்ட் அன்டர்சனால் (Benedict Anderson) கற்பனாவாத மக்கட் கூட்டம் என்ற நூலில் (Imagined Communities) கூறப்பட்ட கருத்தும் முக்கியமானவை. அதைவிட முக்கியமான ஒரு விடயத்தையும் இங்கு கூறியே தீர வேண்டும். சமூகமக்கள் பல வகையான பகுப்புக்களில் அடங்குவர். அப்பகுப்புக்கு மையமாக அமையும் அடையாள வரையறைகள் பல சாதி, சமயம்,

இனம், வர்க்கம், பால்நிலை என்ற ரீதியில் அமையும். அவற்றிற்கு ஒன்றுக்கு மட்டுமே முக்கியத்துவம் அளிக்கப்படும் மரபு கோட்பாட்டு ரீதியில் உண்டு. மாக்ஸிச கோட்பாடு வர்க்கத்துக்கே முதன்மையான ஸ்தானத்தை அளிக்கிறது. தேசிய இன, சமய, சாதீய பால்நிலை போன்றவற்றை அடிப்படையாகக் கொண்ட மக்கள் குழுக்கள் சமூகரீதியில் முக்கியத் துவமற்ற தற்காலிக அடையாளக் குழுக்கள். இவை மேல் வர்க்கத்தாரால் திட்டமிட்டு விதைக்கப்பட்ட 'பிரிவினைகள்'. இவை காலப்போக்கில் மறைந்துவிட வர்க்கமே மேலோங்கி வர்க்கப் போரே மானிடரின் விடிவை நிர்ணயிக்கும்.

இன, மத, மொழிக் கூட்டு என்பவற்றுக்கு மேலானவையாக வர்க்கப்பார்வையை மார்க்சீசம் முன்வைக்கிறது. மொழி, மத, இன, ஆண்-பெண் என்னும் பால்வேறுபாடு எல்லாம் முதலாளித்துவ அமைப்பால் செயற்கையாக உள்நுழைக்கப்பட்டு



படிப்பகம்

padippakam

பேணப்படும் இரண்டாந்தர அம்சமாகும் என்று மார்க்சீயம் கூறுகிறது. மேலும் செவ்வியல் மார்க்சீயம் ஓர் இனத்தின் மொழி கலாசார அடையாளங்கள் என்பவை வர்க்கப் போராட்ட முடிவில் ஒரு வர்க்கமற்ற சமூகம் ஏற்படும்போது இல்லா தொழிந்துவிடும் என்று கூறுகிறது.

கருத்தியலின் (Ideology) ஒரு அங்கமான கலாச்சாரமும் கலாச்சார அடையாளமும் பொருளாதார அடித்தளத்தின் காரண காரிய வெளிப்பாட்டுத் தொடர்பே பொருளாதார நிலை –அதாவது வர்க்க விமோசனம் ஏற்பட்ட கலாச்சார அடையாள வினைகள் அழிந்து போகும் என்பது மாக்ஸிச வாதம். இது பொருளாதாரத்துக்கு ஒரு அதிமுக்கிய ஸ்தானத்தை அளிக்கிறது. ஆனாலும் தற்போதைய மாக்ஸிச வாதிகளால் தேசியமும் முக்கியமானது என அங்கீகரிக்கப்படும் ஒரு அங்கலாய்ப்பு நிலை தோன்றியிருக்கிறது. மார்க்ஸ் கூட ஐரிஷ் மக்களின் தேசிய உணர்ச்சிக்கு மதிப்பு அளித்து அதை ஆதரித்தவரே. ஆ்னாலும் தேசியத்தை `இரண்டாம் பட்சமாக்கி ஆங்கிலேய நாட்டு தொழிலாளரின் வர்க்கப் போராட்டத்தை நீங்களும் சேர்ந்து ஆதரியுங்கள் என அவர்களுக்கு ஒரு வேண்டுகோளை அவர் முன் வைத்தார்.

லெனின் ஏகாதிபத்தியம் என்பது முதலாளித்துவத்தின் உச்ச வளர்ச்சி எனக் கூறினார். ஆனால் அவர் ஒடுக்கப்பட்ட தேசியமக்களின் கலாசார அடையாளங்கள் பற்றி அதிகம் பேசவில்லை. ஆனால் மார்க்சீயம் தேசியவாதத்தை முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சிக்கொரு முன்னேற் பாடாய் அமையும் ஒன்றாகவே கொள்கிறது.

ஆனால் இன்று வர்க்கப் பிரிவுக்குள்ளே நிலவும் சமயம், இனம், தேசியம் சம்பந்தமான பிளவுகள் ஏன் ஆண் பெண் என்று இருபாலாரிடையே நிலவும் பிளவுகள் மார்க்சீய எல்லைக்குள் அடக்கப்பட முடியாதவையாகும். இன்று பெண்கள் பிரிவினை வாதத்தை மட்டும் பேசமுடியாது. இன்று ஆண் ஆதிக்கத்தை ஏகாதிபதித்தியம், இனவாதம், பெரும்பான்மைவாதம் (இன, மொழி, சமய) என்பவற்றோடு சமமாகப் பார்க்க வேண்டும். சர்வதேசியம் (Internationalism) என்பது மார்க்ஸிஸ ரீதியிலும் பெண்நிலை வாதிகளுக்கும் ஒரு எட்டாக் கனியாகவே இருக்கிறது. ஆகவே இன்றைய தேசியம் என்பது இரண்டு பரிமாணங்களை உடையது. ஒன்று தம்மைச் சுரண்டி எல்லா வளங்களையும் சூறையாடிய ஏகாதிபத்தியிலிருந்து விடுதலை பெறுவது. ஆசியா ஆபிரிக்கா கண்டங்களில் இது ஒரு இராணுவ ஆதிக்க நிலைக்குட்பட்டிருந்த வன்முறையையும் கூட தழுவி இருந்த ஒரு தொடர்பாயிருந்தது.



படிப்பகம்

padippakam

இரண்டாவது ஏகாதிபத்திய வாதிகள் விட்டுச் சென்ற குடியேற்ற நாடுகளில் மொழி, இன கலாசாரங்களால் வேறுபட்ட சிறுபான்மைத் தேசிய இனங்கள் தலைதூக்கியமையேயாகும். ஏகாதிபத்தியவாதிகளால் செயற்கையாக ஒன்று கூட்டப்பட்ட ஆட்சி அமைப்புக்குள் இருந்த பல்லினக் குழுக்கள் தமக்குரிய தேசிய சுயாதீனத்தைப் பேண முயன்றன. இவ்வேளை அவை அந்நாட்டுப் பெரும்பான்மை தேசிய இனத்தால் அடக்கப்பட்ட போது எதிர்ப்பும் போராட்டமும் கிளம்பின.

இவ்விடத்தில் இவ்விளைவுகளை மார்க்சீய பார்வையின் இருநோக்குகளில் இருந்து பார்க்க வேண்டும். சுதந்திரம் கிடைத்த ஒரு குடியேற்ற நாட்டில் சிறுபான்மை இனம் பெரும்பான்மை இனத்தின் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற வேண்டும் என்று நினைப்பதும் தனது தனித்துவமான கலாசார அடையாளத்தைப் பேண வேண்டும் என்று நினைப்பதும் பொருளாதார காரணங்களுக்காகவே என்பது சரியே. (அதாவது பெரும்பான்மையினரால் அதன் பொருளாதாரம், அந்தஸ்து, ஆற்றல் யாவும் சுரண்டப்படுவதே காரணம்). இரண்டாவதே நமது பிரச்சனைக்குரிய விஷயமாகும். இவ்விஷயத்தில் நாம் மார்க்சீயம் காட்டும் வியாக்கியானங்களோடு முரண்படவே வேண்டியுள்ளது.

விடுதலை பெற்ற குடியேற்ற நாடுகளில் அங்குள்ள மக்களுக்கு கிடைக்க வேண்டிய பொருளாதார சமூக நன்மைகள் வர்க்க ரீதியாகப் பிரிக்கப்படவில்லை. இனரீதியாக சமமற்ற முறையிலேயே பிரிக்கப்பட்டன. இச்சந்தர்ப்பத்தில் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த மேல்வர்க்கம் பெரும்பான்மை இனத்தின் மேல்வர்க்கம் போல் எவ்வளவோ வசதிகளை அனுபவிக்கும் சௌகரியம் பெற்றிருந்த போதும் அது தனது சிறுபான்மை இனத்தின் மொழிகலாசாரங்களோடு தன்னை இணைத்துக்கொள்ளவே விரும்பியது. விடுதலை பெற்ற குடியேற்ற நாடுகளில் ஒரு பொதுவான அரசியல், கலாசாரம் என்பது இருக்கவில்லை. இந்நாடுகளில் முக்கிய அம்சமாக முதன்மை பெற்றது இன ரீதியான அம்சமே. (அதாவது மொழி, கலாசாரம், மதம் ஆகியவை) இதனால் இந்நாடுகளில் இன மொழிரீதியான போராட்டங்கள் தலையெடுக்க வர்க்க ரீதியான சிந்தனை பின்னடைந்தது. இங்கு கவனத்திற் கொள்ள வேண்டிய விஷயம் என்னவெனில் சிறுபான்மை இனங்களின் இனமொழிரீதியான போராட்டங்களில் அவர்களுக்குள்ளேயே சாதிரீதியாக, பொருளாதார ரீதியாக, சமயரீதியாக, சமூகரீதியாக ஒடுக்கப்பட்டிருந்த சுரண்டப் பட்டிருந்த மக்கள் சகலரும் தம்மை ஒடுக்கிய மேல்வர்க்கத்தோடு இணைந்து இப்போராட்டங்களில் பங்கு கொண்டதே. மேலும் பெண்ணிலைவாதம் பற்றிய



படிப்பகம்

padippakam

பிரச்சனை இங்கு பெரிய அளவில் நிலவாதபோதும் பெண்ணிலை வாதத்திற்கு தம்மை அர்ப்பணித்துக் கொண்ட பலரும் ஆண்களோடு சேர்ந்து இவற்றில் பங்கெடுத்தனர்.

இப்போராட்டங்கள் பற்றி மார்க்சீயவாதிகள் பின்வருமாறு கேள்வி எழுப்பலாம். மொழிசம்பந்தப்பட்ட அப்போராட்டங்கள் மொழியால் பயன் அடையும் மேல்வர்க்கத்துக்கே தேவையான ஒன்றாகும். இதனால் தொழிலாளர் பெறப்போவது ஒன்றுமில்லை. முதலாளித்துவமும் தொழிலாள வர்க்கமும் ஒரே மொழியைப் பேசினாலும் ஒரே கலாசாரத்துக் குரியவர்கள் என்று கூறமுடியாது. இவை போன்ற கருத்துக்கள் சரியானவையாக இருந்தபோதும் கலாசார ரீதியாக வெளிக்கொணரப்படும் தேசியவாதத்தின் தன்மைகளை மார்க்சீயவாதிகளும் நவீன மார்க்சீய வாதிகளும் உணரத் தவறியுள்ளனர் என்ற வாதத்தையும் நாம் அடிக்கடி கேட்கிறோம்.

ஓர் இனத்தின் அடையாளமாக, அவ்வினக் கூட்டத்தின் கூட்டு வாழ்வின் உந்து சக்தியாக உயிர்ப்பாக இருக்கும் மொழி, மரபு, அதன் பழக்க வழக்கங்கள் அவர் வாழும் நிலத்தின் சூழல் யாவுமே ஓர் சக்திமிக்க பிணைப்பாக ஒவ்வொரு இனத்தையும் அணைத்து அடையாளம் காண வைக்கிறது. இந்த இணைப்பில் அவ்வினம் கொள்ளும் திருப்தியும் வாழ்வும் பொருளாதார ரீதியான பார்வையில் மட்டும் விளக்கக் கூடியனவல்ல என்பது உறுதி.

அதற்காக அவை பிழையானவையும் அல்ல. அதேநேரம் இவைபற்றி கூறுவதால், ஓர் இனவாதத்தையோ அல்லது மேலான கீழான கலாசாரப் பாகுபாட்டையோ நான் முன்வைப்பதாகக் கருதக்கூடாது. ஆனால் ஒவ்வொரு கலாசாரமும் தன்னளவில் தனித்தன்மையானதும் சமூக ஆரோக்கிய வளர்ச்சிக்கு பங்களிக்கக் கூடியதுமாகும்.

இன்று தேசிய விடுதலைப் போராட்டம் இப்போ ஒரு சமூக விடுதலைக்கான போராட்டத்தையும் தன்னுடைய முக்கிய அம்சமாகக் கொண்டுள்ளது என்பதையும் இச்சந்தர்ப்பத்தில் கூறவேண்டும். வர்க்கம் சாதி, பால்நிலை மட்டங்களில் தோன்றும் ஒடுக்குமுறைகளும் தேசிய விடுதலைப் போராட்டத்துடன் இணைந்து ஒரு பூரண விடுதலையை மக்களுக்குத் தரவேண்டும் என்பதே சோஷலிச பெண் நிலைவாதிகளின் கொள்கை, ஏக்கம், அபிலாஷை. மேலும் மார்க்சீயவாதிகள் சோஷலிஸப் புரட்சிக்கு தேசிய விடுதலைப் போராட்டம் ஒரு முன்னவசியம் என்று கூறுகின்றனர்.

இச்சந்தர்ப்பத்தில் பெனடிக்ற் அன்டேர்ஸன் (Benedict Anderson) என்பவரின் ஆய்வோடு எனது கட்டுரையின் அப்பகுதியை இணைத்து



படிப்பகம்

முடிக்கலாம் என எண்ணுகிறேன். அவருடைய ஆய்வு (Imagined Communities) ஒரு எழுச்சி கொள்ளும் தேசிய இனத்தின் தனித்துவமிக்க கலாசாரம் என்பது மனோரதிய கற்பனாவாதமிக்கதாய் ஒரு புனிதமான மொழியில் வெளிப்பாடு காண்கிறது என்பதாகும். இதற்கு இன்றைய தொலைத்தொடர்பு சாதனங்கள் (Print Capitalism) உதவுகின்றன. 18ம் நூற்றாண்டில் வேர்கொண்ட பல்வித தேசிய எழுச்சிகளை இத்தகைய தொடர்பு சாதனங்களை ஆக்கிரமித்த ஆய்வறிவாளர் ஆற்றுப்படுத்தினர். இதனையே இவர் "கற்பனைச் சமூகங்கள்" எனத் தனது ஆய்வில் குறிப்பிடுகிறார். இவர் காட்டும் தரவுகள் அறிவுபூர்வமாகவும் விஞ்ஞான தர்க்க ரீதிக்குரியதாக இருந்த போதும் இன்னும் பல விளக்கப்பட வேண்டியனவாய் உள்ளன. அப்படிப் பார்க்கப்போனால் தேசிய உணர்வு என்பதும் கற்பனை ரீதியானது எனப்புறந்தள்ளி விடக்கூடிய ஒன்றா? நிலக்கிழார் வர்க்கம், முதலாளி வர்க்கம், தொழிலாளி வர்க்கம், விவசாயி வர்க்கம் என்னும் வழமையான வர்க்கங்களுக்கு மாற்றாக இவர்கூறும் "புதுவித கூட்டணி" வர்க்கம் இன்று மூன்றாம் உலக நாடுகளிடையே புதிய பரிமாணத்தை தேசியவாதத்தில் ஏற்படுத்தியுள்ளது என்பதும் அதனால் பழைய கோட்பாடுகள் இவற்றின் அடிப்படையில் மீள் ஆய்வு செய்யப்பட வேண்டும் என்பதும் உண்மையே.

இதன் பின்னணியில் பெண்கள் எவ்வாறு அணுகப்பட்டனர் என்பதைப் பார்க்கவேண்டும். இது இரண்டு விதமான அணுகு முறைகளைக் கொண்டுள்ளது. முதலாவது குடியேற்ற வாதத்துக்கும் ஏகாதிபத்தியத்துக்கும் எதிராக தேசியவாதம் எழுச்சி கொண்டபோது பெண்களின் பங்களிப்பு எப்படி இருந்தது என்பது. இரண்டாவதாக நாம் மனங்கொள்ள வேண்டியது என்னவென்றால் தேசங்களுக்குள் இடம் பெற்ற தேசிய இனங்களின் போராட்டத்தின்போது பெண்களின் பங்களிப்பு எவ்வளவு முக்கியமானதாக இருந்தபோதும் அவர்களது நிலை இன்று வரை ஊசலாட்டத்துக்குரியதாகவே உள்ளது.

## ஏகாதிபத்தியத்தோடு முரண் பட்டு நிற்கும் சீர்திருத்தவாதம்

இந்தியா, பிரித்தானியரின் ஆட்சியின் கீழ் இருந்தபோது அதன் பிற்போக்குத்தன்மை கலாசார ரீதியாகச் சுட்டிக் காட்டப்பட்டது. சாதி முறை, மத மூடநம்பிக்கைகள், உடன் கட்டை ஏறுதல் போன்ற பெண்களுக்கான சடங்குகள், முக்காடிட்டு (Purdah) பெண்களை ஒடுக்கிவைத்திருக்கும் முறைமை போன்றவை எல்லாம் "இந்தியாவின் பிற்போக்குத் தன்மைக்கு" எடுத்துக் காட்டாகக் காட்டப்பட்டன. இவை இந்தியாவின் மதங்களுடன் பெருமளவில் இணைக்கப்பட்டதாக இருந்தது நோக்கற்பாலது. இதனால்

இந்தியாவின் மனச்சாட்சி எழுச்சி பெற்றது. சிறைப்பட்டதாய் இந்தியாவின் ஆய்வறிவாளர் எனச் சொல்லப்பட்டோர், இந்து சமயத்தை புனருத்தாரணம் செய்து பழைய வேத மரபுக்கேற்ப அதை வியாக்கியானம் செய்து வேதகாலமே பெண்களின் பொற்காலம் என வர்ணித்தனர். ரமன் ரோய் றனாடே (Raman Roy Ranade) போன்றோரால் இது ஒரு வாதமாக முன்வைக்கப் பட்டது. ஆனாலும் பெண் விடுதலை வாதம் இந்தியத் தேசியத்தின் ஒரு கோணமாக பிற்காலத்தில் சேர்க்கப் பட்டதும் உண்மையே. இந்தியத் தேசிய எழுச்சி இந்தியாவின் உள்ளுணர்ச் சிகளைத் தட்டி எழுப்பியது. தங்களது சாதீய பெண்ணடிமைவாத குறைபாடுகள் தெட்டத்தெளிவான பிற்போக்குச் சக்திகள் என சில அறிவாளர்கள் உணரத் தொடங்கினர். இக்காலகட்டத்தில் இந்தியாவின் விடுதலைப் போராட்டத்தின் போது இந்திய மக்களிடையே காணப்பட்ட சாதிப்பாகுபாடு, பெண் அடிமை போன்ற குறைபாடுகள் வெளிக்கொணரப்பட்டன. பெண்கள் பெருமளவில் இந்தியச் சுதந்திரப் போராட்டத்தில் பங்குபற்றினர். தமது கலாசாரமே தமது தாழ்வுக்குக் காரணமென பெண்கள் கூறினர். சுதந்திரப் போராட்டத்தில் பெண்களும் சேர்ந்து கொண்டனர்.

இச்சந்தர்ப்பத்தில் விதவைகள் மறுமண மறுப்பு, உடன்கட்டை ஏறக் கட்டாயப்படுத்தப்பட்டமை போன்ற பெண்களுக்கு இழைக்கப் பட்டிருந்த அநீதிகளை முன்வைத்து இந்தியா சுதந்திரத்துக்கு தகுதியற்றதாக இருப்பதாக ஆங்கிலேயர் கருதினர் என்றும் கருதப்பட்டது (Janne Liddle, Ram Joshi).

அதேநேரத்தில் ஆங்கிலேயர் உடன்கட்டை ஏறுதல், பால்ய விவாகம், விதவைகளுக்கு மறுமணம் புரிய மறுத்தமை போன்றவற்றுக்கெதிராகச் சட்டங்கள் கொண்டு வந்தபோதும் அவர்கள் உண்மையில் அதில் ஸ்திரமற்ற போக்கையே கடைப்பிடித்தனர். அதனால்தான் மோகன்ராய் போன்றவர்கள் உடன் கட்டை ஏறுதலுக்கெதிராகச் சட்டம் கொண்டுவர மறுத்த ஆங்கிலேய ஆளுனருக்கெதிராக (Privy Council) மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் முறையிட வேண்டிய நிலை ஏற்பட்டது. இது எதைக்காட்டுகிறது? ஆங்கிலேயர் அன்றைய சீர்திருத்தக் கருத்துக்களால் கவரப்பட்டபோதும் இந்தியாவில் அம்மக்களின் நம்பிக்கைகள், சடங்குகளுக்கு எதிராகப் போகவிரும்ப வில்லை. இதன்மூலம் அம்மக்களைப் பகைத்துக் கொண்டு தமது ஏகாதி பத்திய நலன்களுக்கு பாதிப்பு ஏற்படுத்திக் கொள்ள விரும்பவில்லை. இந்நிலை யானது ஆங்கிலேயர் சீர்திருத்தவாதமா? ஏகாதிபத்தியமா? என்ற இருநிலையில் தமது நலன்பேணும் ஏகாதிபத்தியத்தையே தெரிவு செய்தனர் என்பதைக் காட்டுகிறது.

padippakam

மேலும் கதறின்மாயோ (Kathorine Mayo) போன்றவர் தமது நூலான 'அன்னை இந்தியா'வில் இந்தியாவின் பிற்போக்குத் தன்மையைக் காரணம் காட்டி இந்தியாவுக்கு சுயராஜ்ஜியம் வழங்கப்படக் கூடாது எனச் சொல்கிறார். இதுபற்றி நீயூஸ்ரேற்மன், நேஷன் (New statesman, Nation) போன்ற பத்திரிகைகள் விமர்சிக்கையில் இந்தியப் பெண்களின் நிலையானது ஆபிரிக்காவிலும் அவுஸ்திரேலியாவிலும் வாழ்ந்த காட்டுமிராண்டிப் பெண்களின் நிலையை விட மோசமாய் இருப்பதாய் கூறின. இக் கூற்று ஏகாதிபத்தியத்தின் ஒரு தீவிரக்குரல் என்றே கணிக்கப்படவேண்டும். இந்தியாவிற்கு சுதந்திரம் அளிக்கப்பட்டமைக்கு இந்தியாவின் பிற்போக்குத் தன்மைக்குக் காரணம் காட்டியமை ஒரு பாரிய இனவாதத் தன்மையே ஆகும். ஐரோப்பாவின் வரலாற்றில், பெண்களை சூனியக்காரி (Burning of Witches) என்று எரித்தமையையும் பெண்களது உள்ளுறுப்பில் "கற்புப்பட்டி" (Chastity Belt) என்று ஒன்றை அணிவித்து அவர்களை உடல் ரீதியான கட்டுப்பாட்டில் வைத்திருந்தமையும் அவர்களது பிற்போக்குத்தனம் தான் என்பதை மாயோ கத்தரீன் ஐரோப்பிய வரலாற்றிலிருந்து மறைத்து விட்டார். இப்படி ஒரு இனவாதக் கண்ணோட்டத்தில் தான் இந்தியா மட்டுமே பிற்போக்குக் கொள்கைகளை கொண்டிருந்தது என்று கூற முடியும்.

ஏகாதிபத்தியவாதிகளின் தந்தைவழிக் கொள்கைகளால் பாதிக்கப்பட்ட குடியேற்ற நாட்டுப் பெண்கள்

இதே காலத்தில் மேற்குநாட்டார் (ஆங்கிலேயர்) குடியேற்ற நாடுகளில் கடைப்பிடித்த கொள்கைகளில் முரண்பாடுகள் சிலவும் காணப்பட்டன. அதாவது அவர்கள் அமுல்படுத்திய சட்டங்களைவிட ஏற்கனவே குடியேற்ற நாடுகளில் பெண்கள் உரிமை சம்பந்தமாக நடைமுறையில் இருந்த சட்டங்கள், வழமைகள் மிக முற்போக்கானவையாக இருந்தன. இலங்கை, இந்தியா போன்ற நாடுகள் இதற்கு உதாரணமாக இலங்கையில் (ஒபயசேகர 1967) 1803–1833 இற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் பிரித்தானியரினால் றோமன் டச்சு சட்டம் விதிக்கப்பட்டமையானது மிகவும் சமத்துவமான சட்ட அமைப்புக்களை கொண்ட மூன்று பிரதான விடயங்களின் மாற்றத்திற்கு வழிகோலியது. அவை

1. திருமணத்தில் பொதுச் சொத்து என்ற கருத்து அறிமுகப்படுத்தப்பட்டது. அது பெண் களுக்குரித்தான சொத்து என்ற வழக்கமான கருத்திற்கு புறம்பானதாக இருப்பதுடன், மனைவியின் சொத்தை கணவனின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவும் வழிகோலியமை.

2. ஆணுக்கும் பெண்ணுக்கும் சொந்தமான பரம்பரைச் சொத்து பற்றிய சட்டங்களை மாற்றியமை.



படிப்பகம்

3. சிங்கள மக்களின் மிகவும் இலகுவான விவாகரத்துச்சட்டங்களின் அடித்தளங்களை மாற்றியதுடன் றோமன்டச்சுச்சட்டத்தின் தந்தைவழிச் சமுதாய அமைப்புக் கருத்தினையும் அறிமுகப்படுத்தியமை. இது விபச்சாரம்,கைவிட்டு ஓடுதல் ஆகிய இரு சந்தர்ப்பங்களில் மட்டுமே விவாகரத்தை அனுமதித்தது. இதே பண்பையே தமிழர்கள் தேசவழமைச் சட்டத்தின் மூலம் அனுபவித்த நன்மைகள் பறிக்கப்பட்டதின் மூலமாகவும் நாம் காணலாம்.

இவ்வாறே இந்தியாவில் கேரள நாட்டில் நாயர் குடும்பங்கள் மத்தியில் பெண்கள் மிகத்தாராளமான சுதந்திரப்போக்கை அனுபவித்தனர். மணமகனைத் தெரிவு செய்வதுகூட பெண்ணின் கையிலேயே விடப் பட்டிருந்தது. தந்தையே குடும்பத்தின் தலைவன் என்ற நிலையே அங்கு இருக்கவில்லை. பெண்கள் சுயாதீனம் உடையவர்களாய் இயங்கினர். இத்தகைய ஒரு உரிமை கோரும் போக்கு ஆங்கிலேயரின் சட்ட திட்டங்களால் இல்லாமல் போயின.

பெண்கள் உடன்கட்டை ஏறுவது, விதவைகள் மறுமணம் செய்வதை மறுப்பது போன்றவற்றை யெல்லாம் கண்டித்த ஆங்கிலேயர் அவர்கள் கொண்டுவந்த சட்டங்களை விட ஏற்கனவே உள்ளூர் மக்களால் (பெண்களைப் பொறுத்தளவில் வேறு பல விஷயங்களில்) நாயர் குடும்பங்கள் பெண்களுக்கு வழங்கிய குடும்பத் தலைமை, பாலியல் சுதந்திரம் கடைப்பிடிக்கப்பட்ட நல்ல சட்டங் களையும் புறந்தள்ளினர். அவர்களது ஆண் ஆதிக்க பார்வையில் இவைகளும் "பிற்போக் கானவையாக" ஒதுக்கப் பட்டன. இதனால் பெண்கள் இயக்கங்கள் பிரித்தானியரால் பறிக்கப்பட்ட தமது உரிமை களுக்காகவும் இங்கு (கிழக்கு நாடுகளில்) போராட வேண்டி யவர்களாய் உள்ளனர்.

*(அடுத்த இதழில் முடியும்)*



padippakam

# பண்பாட்டறிவும் பண்பாட்டுணர்வும்

*(பண்பாட்டியல் ஆய்விற் கணக் கெடுக்கப்படும் ஒரு முக்கிய புலமைநிலைப் பிரச்சனை பற்றிய ஒரு சிறுகுறிப்பு)*

**பேராசிரியர். கே. சிவத்தம்பி**

இன்று சமூக விஞ்ஞானத்துறை யினரிடையே அதிகம் பேசப்படும் ஒரு கருதுகோள் (எண்ணக்கரு), "பண்பாடு" ஆகும்.

இரண்டாவது உலக யுத்தத்தின் பின்னர் ஏற்பட்ட சமூகவிஞ்ஞானத்துறை வளர்ச்சியின் காரணமாகவும், மூன்றாவது உலக நாடுகள், இனங்கள் பலவற்றின்,அரசியல் – சமூகப்பிரக்ஞை வளர்ச்சி காரணமாகவும் "பண்பாடு" என்னும் கருதுகோள் மிகுந்த முக்கியத்துவமுடைய ஒன்றாக வளர்ந்துள்ளமையை அவதானிக்கலாம்.

இந்த வளர்ச்சியின் பன்முகப்பாட்டைக் கீழ்வரும் உதாரணங்களாற் காணலாம்:

இன்றைய "பின்–நவீனத்துவ" உலகில், சமூக முழுமையை விளங்கிக் கொள்வதற்கான ஒரு புலமை அணுகுமுறையாகப் 'பண்பாட்டாய்வியல் (cultural studies) எனும் புலமை முறையை மேற்கலகில், குறிப்பாக பிரித்தானியாவிலும் அமெரிக்காவிலும் இன்று வளர்த் தெடுக்கப்படுகின்றது. ஸ்ருவாற் ஹோல் (Stuart Hall) என்பவர் இத்துறையில் மிக முக்கியமான ஒருவர்.

சமூகங்களின் பன்முகப்பாட்டையும், அப்பன்முகப்பாடுகளின் தன்மைகளையும் விளங்கிக் கொள்வதற்கு, பண்பாட்டாய் வியல் பயன்படுகின்றது. இது தனது ஆய்வியல் அணுகு முறைக்குள் மார்க்ஸீய முறைமையையும் உள்வாங்கியுள்ளது. இந்த வளர்ச்சி ஒரு புறமாக, பண்பாடென்பது தனியொரு ஆய்வுப்புலமாக, சமூக மானிடவியல், சமூகவியல்துறைகளிலே பயிலப்பட்டு வருகின்றது.

இங்கு 'பண்பாடு' என்பதை ஒரு மனித நிறுவனமாக, மனித ஊடாட்டத்தின் தளமாக ஆராய்கின்ற ஒரு போக்கு உண்டு.

கீழே தரப்பட்டுள்ள பண்பாடு பற்றிய வரைவிலக்கணம் முற்றிலும் மானிடவியற் சார்பு கொண்டதாகும்.

"பண்பாடு" என்பது குறிப்பிட்ட ஒரு மக்கட் கூட்டம் தனது சமூக,வரலாற்று வளர்ச்சியினூடாகத் தோற்றுவித்துக் கொண்ட பௌதீகப் பொருட்கள்,



படிப்பகம்

padippakam

ஆத்மார்த்தக் கருத்துக்கள், மத நடைமுறைகள், சமூகப் பெறுமானங்கள், ஆகியவற்றினதும் தொகுதியாகும். பண்பாடு என்பது ஒரு கூட்டத்தினரின் தொழில்நுட்ப வளர்ச்சி நிலை, உற்பத்திமுறைமை, உற்பத்தி உறவுகள், கல்வி, விஞ்ஞானம், இலக்கியம், கலைகள், நம்பிக்கைகள் ஆகிய வற்றினது தொகுதியாகும்.

பண்பாடு என்பது வெளிப்பார்வைக்கு ஒரு நடத்தை முறையாகவே தோன்றினாலும், உண்மையில் அது ஓர் அறிகை முறைமையே. பண்பாடு என்பது அந்த மக்கட் கூட்டத் தினரிடையேயுள்ள சகலரும் பகிர்ந்து கொள்ளும் கருத்துக்கள், நடைமுறை உத்திகள், வழிநடத்து முறைமைகள் ஆகியனவாகும். அதாவது உண்மையில் பண்பாடு என்பது 'ஒரு' குறிப்பிட்ட குழுமத்திடையே அதன் அங்கத்தவர்கள் கொள்ளும் அர்த்தங்களுக்கான சூழமைவுகளைக் கொண்டதாகும். பண்பாடு மனிதர்களை பக்கு வப்படுத்துவது. ஒரு குறிப்பிட்ட வாழ்க்கை முறைக்கு அந்தக் குழுமத்தின் மக்களை இணைய வைப்பது".

இதைவிட இன்னொரு நிலையிலும் "பண்பாடு" என்னும் கருதுகோள் முக்கியமாகிறது.

அது முற்றிலும் சமூக அரசியல் நிலைப்பட்ட ஒன்றாகும். இங்கு "பண்பாடு" என்பது ஒரு குறிப்பிட்ட சமூகக் குழுமத்தினரது சமூக-அரசியல் தனித்துவத்தைக் குறிப்பதற்கான ஒரு குறியீடாகும்.

இந்நிலையில் பண்பாடு என்பது பிரதானமாக உணரப்படுகின்ற ஒன்றாகவே காணப்படுகின்றது. இது, தேசிய உணர்வு உருவாக்கத்துடன் சம்பந்தப்பட்ட ஒன்றாக அமைகின்றது. குறிப்பிட்ட சமூகங்களின் அரசியற் பிரக்ஞைக்கான திறவுகோலாக அது அமைகின்றது. வரலாற்று ரீதியாகப் பார்க்கும் பொழுது, இந்த உணர்கை, அந்தச் சமூகத்தின் ஒரு வரலாற்றுத் தேவையாக அமைவதையும் அவதானிக்கலாம்.

அண்மைக்கால வரலாற்றில், காலனித்துவ, பின்- காலனித்துவத் தாக்கங்கள் ஏற்பட்டதன் காரணமாக இந்தப் பண்பாட்டு உணர்கை ஏற்பட்டுள்ளது.

இந்தியாவின் பல்வேறு மொழித் தேசியங்கள், திராவிடத்தேசியம், இலங்கையின் சிங்கள-பௌத்த தேசியம், தமிழ்த்தேசியம் ஆகியனவற்றுக்கான ஊற்றுக்காலாக காலனித்துவ அரசியலையும், பண்பாட்டுணர்வையும் கொள்ளல் வேண்டும்.

இன்று நம்மிடையே ஏற்பட்டுள்ள தமிழ்ப் பண்பாட்டுணர்வை விளங்கிக் கொள்வதற்கு இந்த அணுகுமுறை



படிப்பகம்

padippakam

உதவும். இன்றைய நிலையில் தமிழ் மக்களின் சமூக, அரசியல் தனித்துவ உணர்வையும், பல்நாடுகளிடையே பரம்பிக் கிடப்போரிடையே ஒருமைப் பாட்டு உணர்வையும் ஏற்படுத்துவதற்கு இப்பண்பாட்டு உணர்வு, உணர்கை முக்கியமாகிறது.

இந்தப் பண்பாட்டு உணர்வு, தமிழ்ப் பண்பாட்டை வரன்முறையாக அறிவதற்கும், அதன் பாங்குகளை விளங்கிக் கொள்வதற்குமான புலமைத் தேவையை ஏற்படுத்தியுள்ளது.
தமிழ்ப் பண்பாட்டின் பிரதான அமிசங்களை நாங்கள் "மீள் கண்டுபிடிக்க" வேண்டிய ஒரு தேவையை ஏற்படுத்தியுள்ளது.

அடுத்துவரும் கட்டுரைகளில் தமிழ்ப் பண்பாடு என்பது யாது? அதனை எவ்வாறு வரைவிலக்கணம் செய்து கொள்வது என்பது பற்றிய பிரச்சினைகளை ஆராய்வோம்.



# கல்வியும் சமூக மேம்பாடும் ஒரு மாற்றுக் கருத்து

**பேராசிரியர் சோ. சந்திரசேகரம்**

இன்றைய பாடசாலை மாணவரும் பொது மக்களும் தமக்குத் தேவையான பல்துறை அறிவைப் பாடசாலை போன்ற நிறுவன முறையான நிலையங்கள் தவிர்ந்த ஏனைய மூலாதாரங் களிலிருந்தும் பெறக்கூடியதாக உள்ளது. தொலைக்காட்சி, சஞ்சிகைகள், பத்திரிகைகள், வானொலி என்று இப்பட்டியல் நீண்டு செல்லும். எவ்வாறாயினும் கல்வி என்று கூறும்போது உடனடியாகப் பாடசாலைகளும் பல்கலைக்கழகங்களுமே நினைவுக்கு வருகின்றன. கல்வியை வழங்கும் ஏகபோக உரிமை இந்நிலையங்கள் கையில் வந்துவிட்டதாகவும் சிலர் கூறுகின்றனர். இத்தகைய பாடசாலைக் கல்வி என்று தோன்றியதோ அன்று தொடக்கம் பாடசாலை பற்றிய விமர்சனமும் தோன்றிவிட்டது. இன்று அறிஞர் மத்தியில் இவ்விமர்சனம் வளர்ந்தும் வருகின்றது. ஆயினும் மக்கள் மத்தியில் பாடசாலைக் கல்வி பற்றிய ஒரு முழு நம்பிக்கை காணப்படுகின்றது. சித்தாந்த ரீதியாக நோக்குமிடத்து, பழமைவாதிகள் அல்லது நடைமுறையில் உள்ள சமூக நிறுவனங்களில் கோளாறு காணாது அவற்றை அப்படியே ஏற்றுக் கொள்பவர்கள் பாடசாலை வழங்கும் நிறுவனரீதியான கல்வியை அப்படியே


படிப்பகம்

ஏற்றுக் கொள்கின்றனர். தேவைப்படும் போது, அவ்வப்போது கல்விமுறையின் பாடஏற்பாடு, பாடசாலை நிர்வாகம் என்பவற்றில் திருத்தங்களைச் செய்து கொண்டால் போதுமானது என்பது அவர்கள் கருத்து. இலங்கை, இந்தியா போன்ற நாடுகளின் அண்மைக்காலக் கல்வி வரலாற்றில் இவ்வாறே நிகழ்ந்து வந்துள்ளது. இந்நாடுகளில் பாடசாலைக் கல்வி பற்றிய அடிப்படையான விமர்சனம் எதுவும் செய்யப்படவில்லை. பாடசாலைக் கல்வியினுடைய குறைபாடுகள் எத்தகையனவாக இருந்த போதிலும் அதனை ஏற்றுக் கொள்ளும் மனப்பாங்கே காணப்பட்டு வருகின்றது.

பாடசாலைக் கல்வியை விமர்சிக்க முற்பட்டவர்களுள் ஆரம்ப காலத்தில் தீவிரவாத அரசியல், பொருளாதார சிந்தனையா ளர்களும் காணப்பட்டனர். மார்க்சீயச் சிந்தனை யாளர்கள் முதலாளித்துவ சமுதாய அமைப்பினைத் தொடர்ந்து நிரந்தரத்துவப்படுத்தும் பணியையே கல்விமுறைகள் செய்கின்றன என்றும் நடைமுறையில் காணப்படும் வகுப்புப் பேதமுள்ள சமூக அமைப்பினை மறுபடியும் மறுபடியும் உருவாக்கி அதன்னை நிலைபெறச் செய்வதே கல்விமுறைமின் தலையாய பணியெனக் கூறினர். பாடசாலைக் கல்வி என்பது உயர்வகுப்பினரின் மேம் பாட்டுக்கு உருவாக்கப்பட்ட ஏற்பாடென்றும் பாடசாலையாகிய நிறுவனத்தில் காணப்படும் உள்ளமைப்பு, கலாச்சாரம், பாடஏற்பாடு, ஒழுங்கமைப்பு என்பவற்றை உற்று நோக்கின் அவற்றில் அவ்வுயர்வகுப்பு 'வர்க்கச் சார்பைக்' காணலாம் என அவர்கள் கருதினர். பாடசாலைக் கல்வியினூடாக வழங்கப்படும் அறிவு - சமூக விஞ்ஞான, இயற்கை விஞ்ஞான அறிவு எவையும் நடுநிலையானவை; அறிஞர் களின் பக்கஞ்சாராத ஆய்வுகளின் விளைவு என்ற கருத்தையும் இவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை. இவர்களின் நோக்கில், பரந்த அறிவுத் தொகுதியிலிருந்து பாடசாலையில் கற்பிக்கவெனத் தெரிவுசெய்யப்படும் அறிவு, பக்கஞ்சாரா அறிஞர்களால் உருவாக்கப்பட்டது என்று கூறு வதைவிட சமூக சக்திகளினால் உருவாக்கப்பட்ட அறிவு (socially constructed knowledge) என்றே கூறவேண்டும்; முதலாளித்துவ அமைப்பில் தொழிலாளர் வகுப்பினர் களுக்கு வழங்கப்படும் குறைந்த கல்வி வசதிகளும் குறைந்த தராதரத்திலான பாட ஏற்பாடும் அவர்களை நிரந்தரமான முறையில் தொழிலாளர்களாகவே இருக்கச் செய்கின்றன. உயர் வகுப்பினருக்கான பாடசாலைக் கல்வி வழங்கும் அறிவும் மனப்பாங்குகளும் விழுமியங்களும் மத்திய வகுப்பைச் சேர்ந்த மாணவர்களை அவர்களுடைய உயர் சமூக வகுப்பில் இணைந்து வாழ்வதற்கான சமூகமயமாக்கலை வழங்குகின்றன இவ்வாறான பாடசாலை முறை பொன்றினைப் பொதுப்பாட ஏற்பாட்டுடன் தொழிலாளர் வகுப்பினருக்கு அறிமுகம் செய்தாலும்,

padippakam

உயர் வகுப்பினருக்குரிய பாட ஏற்பாட்டினால் தொழிலாளரின் பிள்ளைகள் அதிக பயனடையப் போவதில்லை என்ற கருத்தும் கூறப்படுகின்றது. எனவே, கல்விச் செயற்பாடு, சமூகத்தில் உள்ள ஏற்றதாழ்வுகளைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதுடன் இருக்கின்ற பிரச்சினைகளைத் தீர்க்க உதவாது புதிய பிரச்சினைகளை உருவாக்கும் என்ற எதிர்மறைக் கருத்தைத் தீவிரவாதக் கல்வியாளர்கள் வெளியிடுகின்றனர்.

ஒரு நாட்டை நவீனமயப்படுத்தத் தேவையான நவீன பிரஜைகளை உருவாக்கக் கல்வி பயன்படும் என்பது பலருடைய கருத்து. புதிய அனுபவங்களை வரவேற்றல், சமூக மாற்றத்தை ஏற்க ஆயத்தமாயிருத்தல், தரவுகள், தகவல்களினடிப்படையில் கருத்துக்களை உருவாக்குதல், கடந்த காலங்களை விடுத்து எதிர்காலம் பற்றிச் சிந்தித்தல், கல்வியில் கூடிய அக்கறை செலுத்தல், உற்பத்தி நுட்பங்களைப் பெரிதும் விரும்புதல் – இவை போன்ற நவீன மனிதனுக்குரிய குணாதிசயங்களைக் கல்வியினூடாகவே வளர்க்க முடியும் பாடசாலை போன்ற நவீன நிறுவனமொன்றில் பங்கு கொள்வதன் மூலமே இந்நவீன பண்புகளைப் பெறமுடியும்.

ஆயினும் பல ஆய்வாளர்கள் பாடசாலைகள் இவ்வாறான நவீன பண்புகளை வழங்குவதைவிட மரபுவழிச் சிந்தனைகளையே பெரிதும் வழங்குகின்றன என்பர். மேலும் பாடசாலைகள் உருவாக்கும் நவீன மனிதர்கள் சமுதாயத் தொடர்பினை இழந்து உயர் தொழில்களை நாடி வெளிநாடு சென்று விடுகின்றனர் என்ற கருத்தும் உண்டு. இதனால் சாதாரண மக்க–ளைக் கொண்ட சமுதாயம் பயனடை–வதில்லை என்பது அவர்கள் கருத்து.

சமூக அபிவிருத்தியின் ஒரு முக்கிய அம்சம் உயர்ந்த வாழ்க்கைத் தராத–ரங்களும் (high quality of life) அடிப்படையான மனித தேவைகள் நிறைவு செய்யப்படுவது மாகும். இவ் வடிப்படைத் தேவைகளை நிறை வேற்றிக் கொள்ள முடியாத ஏராளமான பின்தங்கிய வகுப்பினர் அபிவிருத்தியில் பங்கு கொள்ள முடியாது. எழுத்தறிவு வளர்ச்சியும் கல்வித்தேர்–ச்சியும் அடிப்படைத் தேவைகளான போஷாக்கு, சுகாதாரம், சிசு மரணங்களைத் தவிர்த்தல் போன்றவற்றுடன் தொடர்புடையவை என்று கூற முடியும். ஆயினும் இன்றைய ஆய்வாளர்கள் கல்வித்தேர்ச்சி அதிகரிப்பதால் எவ்வாறு சமூக நலன்கள் சமமாகப் பகிரப்பட்டு வழங்கப்படுவதை உறுதி செய்ய முடியும் எனக் கேள்வி எழுப்புகின்றனர். வாழ்க்கைத் தராதரங்களில் ஏற்படும் அதிகரிப்பு, அடிப்படை மனித தேவைகள் நிறைவு செய்யப்படல் என்பன நாட்டின் அரசியல் வளர்ச்சியைப் பொறுத்த விடயங்கள் என்று அவர்கள் கூறுவர்.



படிப்பகம்

padippakam

பாடசாலைக் கல்வி சமூக அபிவிருத்திக்கு ஆற்றும் பங்கினைப் பற்றிய இத்தகைய எதிர்க்கருத்துக்களில் முக்கியமானது கல்வி, சமூக வேறுபாடுகளையும் ஏற்றத்தாழ்வு களையும் முன்னெடுத்துச் செல்கின்றது என்பதாகும் அதாவது கல்வி, சமூகத்தில் ஆதிக்கம் செலுத்தும் வகுப்பினரின் நலன்களுக்குச் சார்பான ஒரு செயற்பாடு என்னும் கருத்து பெரிதும் வலியுறுத்தப்பட்டது. உயர் சமூக வகுப்பினர் என்ற நிலைமைக்கு அப்பால் ஆட்சி செலுத்தும் பிரிவினர், பல இன சமூகங்களில் ஆட்சி அதிகாரத்தைப் பெரும் பெரும்பான்மையினர் போன்றோர் கல்விச் செயற்பாட்டைத் தமது நலன்களுக்கு எதிர்மறையாகப் பயன்படுத்தியமைக்கு வரலாற்றில் பல உதாரணங்கள் உண்டு.

இரண்டாம் உலகப்போருக்கு முற்பட்ட ஜெர்மனியில் நாஸிஸக் கட்சியினரும் ஜப்பானில் இராணுவவாத ஆட்சியாளர்களும் வளர்க்க முற்பட்ட அதிதீவிர தேசியவாதத்துக்கு அவர்கள் கல்வியையே கருவியாகக் கொண்டனர். பாடசாலைகளில் ஜெர்மனியர், ஜப்பானியர் ஆகியோரின் இன மேன்மை மாணவர்களிடம் பெரிதும் வலியுறுத் தப்பட்டது. ஐக்கிய அமெரிக்காவில் கறுப்பர்களுக்குக் கல்விஉரிமை மறுக்கப்படப் பெரும்பான்மை வெள்ளையர்கள் காரணமாயிருந்தனர் தென்னாபிரிக்காவில் வாழ்ந்த பெரும்பான்மையினக் கறுப்பர்களுக்கு வழங்கப்பட்ட தரங் குறைந்த கல்வி, அவர்களை வெள்ளையர்களுக்குத் தாழ்ந்து பணிந்து வாழும் பயிற்சியையே வழங்கியது. நவீன பாணியிலான மேற்கத்தைய கல்வியைப் பயின்று தேர்ச்சி பெறுமளவுக்குக் கறுப்பர்கள் முழுமனிதர்களாக 'இன்னும் பரிணாம வளர்ச்சி பெறவில்லை' என வெள்ளையின அறிஞர்கள் கூறினர்.

ஐக்கிய அமெரிக்காவில் குடியேறிய இத்தாலியர், ஸ்பானியர் மற்றும் ஆங்கிலம் பேசாத அனைத்துக் குடியேறிகளையும் 'அமெரிக்க மயமாக்கப்பட' ஆங்கில மொழிக் கல்வி நடைமுறைப்படுத்தப்பட்டது. மலேசியாவில் வாழும் சீனர்கள், இந்தியர்கள் போன்ற குடியேறிகள் இடைநிலைப் பாடசாலைகளிலும் உயர்கல்வி நிலையங்களிலும் கட்டாயமாக மலேசிய மொழியிலேயே கற்க வேண்டியதாயிற்று துருக்கியில் குர்டீஸ் இனத்தவர்கள் தமது மொழியில் பிறருடன் பேசுவதற்கும் தடை விதிக்கப்பட்டது. இவ்வாறு பாடசாலைக் கல்வி பிள்ளைகளின் அறிவுசார் மற்றும் உளப்பாங்கு வளர்ச்சிகளைக் கருத்திற் கொள்ளாது ஆட்சி செய்யும் இனத்தவரின் பெரும்பான்மை கலாசாரத்தைச் சிறுபான்மையினர் ஏற்கச் செய்ய ஒரு கருவியாகப் பயன் படுத்தப்பட்டது.

சற்று பின்னோக்கிப் பார்க்கும்போது ஐரோப்பிய குடியேற்ற ஆட்சியாளர்கள், தமது ஆட்சியை



படிப்பகம்

வலுப்படுத்தும் நோக்குடனேயே பாடசாலைக் கல்வி முறையொன்றை உருவாக்கியிருந்தனர். ஐரோப்பிய ஆட்சியாளர்களுக்கும் ஆளப்பட்ட குடியேற்ற நாட்டு மக்களுக்குமிடையில் தொடர்பை ஏற்படுத்தும் பாலமாக விளங்கக்கூடிய சுதேசிகளைக் கொண்ட ஒரு மத்தியதர வகுப்பினரை உருவாக்கும் நோக்குடன் வசதி படைத்த சுதேசிகளுக்கு என ஆங்கிலக் கல்வி முறையொன்று உருவாக்கப் பட்டது. இவர்கள் கட்டணஞ் செலுத்தி ஆங்கிலக் கல்வி பயில, சாதாரண சுதேசிகளின் பிள்ளைகளுக்கு சுய மொழிகளில் அடிப்படை எழுத்தறிவு மட்டும் புகட்டப்பட்டது. விஞ்ஞானக் கல்வி, வளர்ந்தோர் கல்வி, தொழில்நுட்பக் கல்வி என்பன முற்றாக அலட்சியம் செய்யப்பட்டன. ஆங்கிலம் கற்ற சுதேசிய மத்தியதர வகுப்பினரைக் கொண்டு குறைந்த செலவில் ஆட்சி இயந்திரம் அமைக்கப்பட்டது.

குடியேற்ற ஆட்சிக் காலத்தில் எவ்வாறு அந்நிய ஆட்சியாளரின் நலன்களைக் கருதிய கல்வி முறை உருவாக்கப்பட்டதோ அதே போன்று இந்நாடுகள் சுதந்திரம் பெற்ற பின்னர் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிய பெரும்பான்மையினர் தமது நலன்களை மேம்படுத்திக் கொள்ளக் கல்வி முறையைப் பயன்படுத்தியமைக்குச் சான்றுகள் உண்டு. இலங்கையின் கல்வி வரலாற்றில் இதற்குப் பல ஆதாரங்கள் உண்டு. சுதந்திர இலங்கை வரலாற்றின் பிற்பட்ட காலத்தில் அபிவிருத்திச் செயற்பாட்டுக்கான கொள்கைகளை வகுத்தது. இவ்வாறு மிகப்பிந்தி அபிவிருத்திப் பாதையில் காலடியெடுத்து வைத்த நாடுகளில் தொழில்களுக்கும் (jobs) கல்வித் தகுதிகளுக்குமிடையில் நெருங்கிய தொடர்பு ஏற்படுத்தப்பட்டது. அரசாங்க சேவையில் ஒவ்வொரு பணியும் (உதாரணமாக: வரி அலுவலர், சமூக சேவை அலுவலர், அரசாங்க நிர்வாகிகள், வங்கி ஊழியர்) ஒரு குறிப்பிட்ட கல்வித் தகுதியுடன் தொடர்பு படுத்தப்பட்டது. க.பொ.த. சா.ꞏ.நி, க.பொ.த உ.ꞏ.நி, மற்றும் பல்கலைக்கழகச் சான்றிதழ்கள் குறிப்பிட்ட வெவ்வேறு தொழில்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்டன. இத்தகைய தொழில் சான்றிதழ் தொடர்பின் காரணமாகப் பரீட்சைகளுக்கு ஆயத்தம் செய்து கல்வித் தகுதிகளைப் பெறும் ஆர்வம் மேலிட்டது. கல்வியின் ஏனைய உயரிய நோக்கங்கள் அனைத்தும் கைவிடப்பட்டு பரீட்சைகளும் சான்றிதழ்களும் முக்கியத்துவம் பெற்றன. இந்நிலைமை 'டிப்ளோமா நோய்' எனவும் வர்ணிக்கப்பட்டது. இதனால் சிறுபான்மையினரின் கல்விநிலையங்களை விடப் பெரும்பான்மையினரின் நிலையங்களே முக்கியத்துவம் பெற்று அவற்றுக்கே கூடிய நிதி ஒதுக்கப்பட்டது. 1990 களின் பாடசாலைத் தரவுகளின்படி, யாழ் மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் தமிழ் மாணவர்கள் பயிலக்கூடிய விஞ்ஞான க.பொ.த உ.ꞏ.நி வகுப்புகளைக் கொண்ட (IAB) பாடசாலைகளின் தொகை மிகக் குறைவாகக் காணப்பட்டது. வவுனியா,



படிப்பகம்

முல்லைத்தீவு, கிளிநொச்சி, மட்டக்களப்பு மற்றும் மலையகத்தில் தமிழர் வாழும் மாவட்டங்களில் இத்தகைய கல்வி வசதிகள் இல்லை. குறிப்பாக மலையகத்தில் வாழும் 10 லட்சம் மக்களுக்கு இத்தகைய ஐயுடீ பாடசாலைகள் 9 மட்டுமே உண்டு. க.பொ.த.உ.:.நி பரீட்சைக்கு அமரும் 170,000 மாணவர்களில் 500 பேர் மட்டுமே மலையக மாணவர்களாவர். வட மாகாணத்தில் யாழ். தவிர்ந்த ஏனைய மாவட்டங்களின் நிலைமையும் இதுவேயாகும். பல்கலைக்கழகத்துக்கு அனுமதி பெறும் 9,000 மாணவர்களில் இம்மாவட்ட மாணவர் தொகை 200 வரையே இருக்கக்கூடும்.

கல்வித் தகுதிகளின் அடிப்படையில் வேலைவாய்ப்புகள் வழங்கப்படுவதால், மலையகம், வவுனியா, முல்லைத்தீவு போன்ற மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் அரசாங்க சேவையில் மிகவும் குறைவு. யாழ். மாவட்டம் மட்டுமே கல்வியில் முன்னேறியிருந்த படியால் அரசாங்க சேவையில் உள்ள குறைந்த தொகை தமிழர்களில் யாழ் அலுவலகர்கள் மட்டுமே அதிகம். கல்வித்துறை சார்ந்த அதிகாரம் அனைத்தும் மத்தியில் குவிக்கப் பட்டிருப்பதால் பின்தங்கிய மாவட்டங்களில் வாழும் தமிழ்ப் பாடசாலைகள் காலங்காலமாகப் புறக்கணிக்கப்பட்டு வந்தன. இப்பின்னணியில் அரசாங்க சேவை ஊழியர்களில் 5.9மூ மட்டுமே இலங்கைத் தமிழர் மாகாண சேவைகளில் அவர்களுடைய வீதம் 7.1% அரசாங்கக் கூட்டுத்தாபன சேவையில் அவர்களுடைய வீதம் 8.2% மட்டுமே. இச் சேவைகளில் இந்தியத் தமிழர்களின் வீதம் முறையே 0.1%, 0.2%, 0.5% மட்டுமேயாகும்.

பல்கலைக்கழக அனுமதிக் கொள்கைகள் 1970 தொடக்கம் தமிழர்களின் அனுமதியைக் கட்டுப்படுத்தும் வகையில் அமைந்தன. மொழிவாரியான தரப்படுத்தல், மாவட்ட ரீதியான அனுமதி போன்ற கொள்கைகள் காரணமாகப் பொறியியல், மருத்துவம் ஆகிய துறைகளில் அவர்களுடைய தொகை குறைய நேரிட்டது. இன்று பல்கலைக் கழகங்களில் பயிலும் மொத்த மாணவர் தொகை 32,000. இதில் தமிழ் மாணவர் தொகை 5,000–6,000மாவது இருத்தல் வேண்டும். ஆனால் அவர்களுடைய தொகை 2,000–3,000 வரையே இருக்கக் கூடும். இதன் பொருள், பட்டதாரி களுக்கென உள்ள முக்கிய தொழில்களில் தமிழர்கள் சேருவது குறையும். இன்று உயர்மட்ட அரச பதவிகளில் தமிழ் அதிகாரிகள் தொகையை விரல்விட்டு எண்ணி விடலாம்.

இலங்கையில் அரசியல் வலிமையற்றவர்களாகச் சிறுபான்மைத் தமிழர்கள் இருப்பதால், கடந்த 50 ஆண்டுகாலக் கல்வி வளர்ச்சியின் பெறுபேறுகளைச் சம அளவில் பெறத் தவறி விட்டனர். கல்விக் கொள்கைகளும் சீர்திருத்தங்களும் (இலவசக் கல்வி, இலவசப் பாட நூல், இலவச சீருடை,

padippakam

# அக்கினிக் குஞ்சு

மு. பொன்னம்பலம்

கவிஞர்கள் தத்துவ ஞானிகளாய் இருக்க வேண்டும் என்று யாரும் எதிர்பார்க்கப்போவதில்லை. ஆனால் அவர்கள் தரிசனம் உடையவர்களாய் இருக்க வேண்டும் என்பது எவருக்கும் உடன்பாடான ஒன்றே. தத்துவக் கோட்பாடுகள் போட்டு அவற்றின் சூத்திரங்களுக் கேற்ப கவிதை எழுத ஒருவன் முற்படுவானேயாகில் அவன் கவிதையின் உயிரையே சாகடித்து விடுகிறான் என்பதே உண்மை. ஆனால் அதே நேரத்தில் கவிஞன் என்பவன் தரிசன வீச்சுடையவனாக இருப்பதென்பதும் அத்தரிசன வீச்சின் ஒளியில் தன் படைப்புகளை கலைத்துவ உச்சங்களுக்கு எடுத்துச்

செல்வதென்பதும் வேறு விஷயம். இந்தப் பண்பு ஒரு கவிஞனிடம் இல்லையெனில் அவன் எத்தனை படைப்புகளைத் தந்த போதும் அவை படிப்பவனின் அகஆழங்களைத் தொட்டு உணர்வேற்ற முடியாத வெறும் மலட்டுப் படைப்பு களாகவே முடிந்து விடும். அதாவது தரிசனம் என்னும் உள்ளொளிப் பாய்ச்சுதலில் ஒருவனது படைப்பானது பரந்துபட்ட ஓர் கருத்தியல் மினுக்கத்தை தன்னகத்தே கொண்டு ஒரு பூரண இலக்கியப் படைப்பாக மாறுகிறது. இத்தகைய கவிஞனின் சிருஷ்டிகள் எத்தனை சிறியதாய் இருந்தாலும் ஒரு முழுமையின் நிறைவுடைய தாகவே இருக்கும். ஓர் நுண்ணிய அணுவுக்குள் முழுப் பிரபஞ்சத்தினதும் பேர் உலாத் தெரிவது போன்றதே இது. அதேவேளை ஒரு படைப்பு எத்தனை பெரியதாக (அளவில்) இருந்தபோதும் அது காலத்தின் தேவை யறிந்த தரிசன எறியங்களைக் கொண்டிருக்காத பட்சத்தில் அதன் சாதனை மட்டுப் படுத்தப்பட்ட சாமான்யத் தன்மை உடையதாகவே இருக்கும்.

இதனால்தான் போலும் ஜோன் மில்டனின் பெரிய படைப்பான 'சொர்க்கம் நீக்கம்' (Paradise Lost) தாந்தேயின் படைப்பான 'தெய்வீக நாடகத்'தோடு (Divine Comedy) ஒப்பிடப்படும்போது தனது ஆற்றலை இழந்து போவதாக மேற்குலக விமர்சகர் கள் கூறியுள்ளனர். 'டிவைன் கொமடி' வெளிப்படுத்தும் கலாரீதியான தரிசனத்தின் முன்னே கவித்துவ வேலைப்பாடுகளில் அதிக அக்கறை காட்டும் 'சுவர்க்க நீக்கம்' ஒரு பண்டிதத் தனமான படைப்பாகவே சிறுத்து விடுவதாகக் கூறப்படுகிறது.

இங்கே பாரதியின் கவிதையான 'அக்கினிக் குஞ்சு' இதை நன்கு விளக்க உதவுகிறது.



படிப்பகம்

பெற்றால் போதும் என்ற இலட்சியத்துடன் செயற்படுவது மட்டுமே எமது நாட்டின் ஜனநாயகத்தின் அணிகலன்களாயின. மறுபக்கத்தில் வாக்காளர்களும் தமது வாக்குப்பலத்தால் சாதித்தவை என்ன என்பதையும் யோசித்துப் பார்த்தல் வேண்டும். சர்வசன வாக்குரிமையை முன்கூட்டியே பெற்றவர்களில் நாங்களும் அடக்கம் என்று வாய்கூசாமல் பேசும் போது 25 வருடகாலம் அவவசரகாலச் சட்டத்தின் கீழ் வாழ்ந்து வருகின்றோம் என்பதை மறந்து விடுகின்றார்களா? எதிரிக்குச் சகுனப்பிழை ஏற்பட்டால் போதும் என்று மூக்கினை அறுத்துக் கொண்டிருக்கும் அதேவேளை சமத்துவம் பற்றியும் வாய்கிழியப் பேசிக்கொள்கிறோம். இந்தப் பம்மாத்து நாடகம் தொடர்வதற்குக் காரணமே சர்வசன வாக்குரிமைதான் என்பது எனது கருத்து.

புரிந்துணர்வு, சகிப்புத்தன்மை, பரஸ்பரக் கௌரவம், கருத்துச் சுதந்திரம், நடமாடுஞ் சுதந்திரம், ஆட்சியாளரின் வெளிப்படையான தன்மை, பொறுப்புடைமையைக் கேள்விக்குட் படுத்துதல் போன்றவற்றில் இலங்கைச் சமூகம் கவனஞ் செலுத்தியிருந்தால் தேசிய கீதத்தை எப்படி நாம் மறந்து போயிருப்போம்? மாறாக, அரசியலமைப்புக்கு ஆறாவது திருத்தம் வந்தது. இலங்கைக்கு விசுவாசமாக இருப்போம் என்று சத்தியம் மட்டுமே செய்து கொடுத்தோம். இலங்கை எமக்கு விசுவாசமாக இருக்கின்றதா என்று கேட்கக்கூடிய அளவுக்கு வாக்குப் பெரும்பான்மை இல்லாததால் வந்த வினைதானிது.

ஆக, வாக்குப்பலமே ஜனநாயகம் என்று நிலைநாட்டப்பட்டு விட்டது. ஜனநாயக விழுமியங்களைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டு இடைக்கிடை தேர்தல் வரும். ஆணைக்குழுக்கள் வரும். அறிக்கைகள் வரும். மறுபடியும் தேர்தல்கள் வரும். ஜனநாயகம் தூரப் போய் விட்டதனால்தான் சுதந்திரம் என்பது எமக்கு அந்நியமாகிப் போய் விட்டது. அடையான அட்டையோடும் பொலிஸ் பதிவோடும் கண்ணில் தெரியாத விலங்குகளுடன் நடமாடும் மட்டும் நாமும் நாமமது இலங்கையர் எனக் கொள்வோம்.



தலைப்பட்டு விட்டன. இதே காரணங்களுக்காகத் தான் இவை முன்னர் போட்டியிலிறங்கி தம்மை வேறுவேறாக்கி எல்லைகளைக் கட்டிப் பிடித்துக் கொண்டிருந்தன.

எனவே இன்று 'சுதந்திரம்' என்பது பொருளாதாரச் 'சுதந்திரம்' என்றாகி விட்டது. பாதுகாப்பு என்பது வருமானத்தின் மொத்த அளவு என்ன என்பதில் தங்கி நிற்கின்றது. வல்லரசு என்பதற்கும் பணமே உரமூட்டுகின்றது. எல்லாவகைகளிலும் பிளவுகளை ஒழித்து வளஞ்சேர்ப்பது எப்படி என்பதில் மட்டுமே மேற்கு நாடுகள் குறியாக இருக்கின்றன. நாம் அன்று போலவே இன்றும் வீம்புச் சண்டையிலேயே காலத்தைக் கழிக்கின்றோம். சமத்துவம் என்ற சொல்லை உதட்டளவில் மட்டும் வைத்துக் கொண்டு சட்டங்கள் போட்டு மனங்களை ஒட்டிவிடலாம் என்பதிலேயே காலத்தை ஓட்டிக் கொண்டிருக் கினறோம். 200 வருடங்களுக்கு முன்னரும் ஐரோப்பாவில் எல்லைகள் முக்கியத்தவத்தைப் பெற்றிருக்கவில்லை. அதாவது territorial state என்பது போற்றப் பட்டிருக்கவில்லை. அது இன்று அந்தப் பழைய நிலைக்குத் திரும்பிக் கொண்டிருக்கின்றது. இன்று ஒரு நாட்டின் மதிப்பை, செல்வாக்கை, பலத்தைத் தீர்மானிப்பது எல்லைகளின் விஸ்தரிப்பு அல்ல.வேறு பல காரணிகள் உள்ளன. பொருளாதாரம் அவற்றுள் பலமான ஒன்றென்பதைப் பார்த்தோம். ஆனால் நாம் இன்னும் 200 வருடங்கள் பின்தங்கியே நிற்கவேண்டும் எனறு அடம்பிடிக்கின்றோம். அவ்வளவுதான் வித்தியாசமே.

## சுதந்திரச் சூத்திரம்

எம்மைப் பொறுத்தளவில் சுதந்திரம் என்பது வெறும் கற்பனாவாதத்திலும் போலிக் கௌரவங்களிலும் வரலாற்று மாயைகளிலும் உருக்கொடுக்கப்பட்டு வரட்டுக் கௌரவமாக வடிவமைக்கப் பட்டுள்ளது.இன்று அது அடித்துப் பறித்து ஆளைச் சுருட்டும் அதிகாரம் என்றாகிவிட்டது.

மலையக மக்களுடைய வாக்கு ரிமையைப் பறிப்பதில் ஆரம்பித்து இன்று அடையாள அட்டை, பொலிஸ் பதிவு என்று கோவைகளுடன் நடமாடும் தேவைகளை உருவாக்கி விட்டிருப்பது தான் எமது சுதந்திரத்தை நாம் சுவாசித்துக் கண்டபலன். இந்த ஐம்பது வருட காலப் பகுதியில் எப்போதாவது ஒருமுறை ஜனநாயகம் என்பது கொடிகட்டியிருந்தால் 'இலங்கையர்' என்ற அடையாளமும் நிச்சயம் கொடிகட்டியே இருக்கும். ஆனால் கொடியில் கூட ஜனநாயகம் குடியேற மறுத்துவிட்டது.

தேர்தலில் வாக்குப்போடுவது, கட்சி மாறுவது, எப்போதும் ஆளுங்கட்சிக்கே ஆதரவாக இருப்பது, ஏதேனும் ஒரு பதவியை ஏதேனும் ஒரு சபையில் (கிராமசபையிலிருந்து பாராளுமன்றம் வரை இது நீளும்) ஏதேனும் ஒரு பதவி

padippakam

வகையில் ஓர் அடையாளத்தை வழங்க முயற்சித்ததா? தேசப்பற்று என்பது ஒரு பகுதி மக்களிடையே வேரூன்ற முடிந்ததா என்பதையும் பார்த்தாக வேண்டும்.

1948இல் நாடு சுதந்திரம் பெற்றபோது கொஞ்சநஞ்சமாக ஒட்டியிருந்த தேசப்பற்று என்பதைக் களைவதில் சுதந்திர இலங்கை வெற்றிக்கொடி நாட்டியதுதான் கடந்த 50 வருடகால வரலாறு. இந்த வரலாற்றை ஜனாதிபதி யுட்படச் சில அமைச்சர்களும் அரசியல் தலைவர்களும் ஒப்புக் கொள்கின்றார்கள். ஆனால் அதற்கு அப்பால் அவர்களால் நகர முடியவில்லை. ஏன் என்பதில்தான் எங்களது தோல்விக்கான காரணம் தங்கியுள்ளது. வாக்குகளின் பலம் அவர்களை நகரவிடாமல் செய்கின்றதா? அல்லது அவர்களாகவே பூட்டிக் கொண்ட விலங்குகளிலிருந்து விடுபட முடியாமல் தவிக்கின்றார்களா?

அடிப்படையில், இலங்கையின் குடியியற் சமூகம் (Civil Society) என்பது எது? சுதந்திரம் என்பது எது, தேசியத்தின் தாற்பரியங்கள் என்ன? என்பதையிட்டு நாம் அலட்சியமாக இருந்து விட்டோம். எதை உருவாக்க வேண்டுமோ அதை விடுத்து அதற்கு நேர்மாறான திசையில் நாம் பயணிக்கத் தலைப்பட்டதன் பின்னர் யாரை நொந்து என்ன பயன்? ஆக, கடந்த 50 வருடங்களில் இலங்கைச் சமூகம் என்று ஒன்று உருவாகுவதில் ஏற்பட்டிருப்பது வெற்றியா இல்லைத் தோல்வியா? எதையிட்டுக் கொண்டாட வேண்டும்?

## ஜனநாயகம் என்றால் என்ன?

முதலில் குறிப்பிட்டபடி பார்த்தால் அரசின் அதிகார மட்டுப்பாடுதான் ஜனநாயகம் என்று வரும். மீண்டும் இங்கே வரைவிலக்கணப்படுத்துவது அவசியமாவது ஏனெனில் கடந்த 50 வருடகாலமாக நாம் வரித்துள்ள ஜனநாயகத்தை வெளிச்சமாக்குவதற் காகவே. நாட்டிலுள்ளவர்கள் பொருளா தார, சமூக, அரசியல் காரணிகளால் ஒன்றிணைந்தவர்களா என்பதுகூடக் கவனிக்கப்படாமல் அவர்கள் மீது தேசிய அடையாளத்தைத் திணிப்பதாயின் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்ட state of mind என்பது என்னாகும்? இதை ஒருவழிப்பாதையாக மட்டும் எண்ணி நடைபோடும் முயற்சியே கடந்த ஐம்பது வருடங்களாக நடை பெற்றுள்ளது.

பிளவுகளுக்கான காரணங்களை அப்படியே வைத்துவிட்டு அல்லது அந்தப் பக்கத்தைத் திரும்பிப் பாராமல் தேசிய ஒருங்கிணைப்புப் பற்றிப் பேசுவது தோல்வியை மட்டுமன்றிச் சந்தேகங் களுக்கும் இடமளிப்பதாகவே இருந்து வந்துள்ளது. இருக்கவும் போகின்றது.

ஏற்பட்டுவருகின்ற வர்த்தக, கைத் தொழில், விவசாய மறுமலர்ச்சி களுக்கு முகங்கொடுப்பதற்காகப் பிரிட்டன் போன்ற நாடுகளே இன்று எல்லைகளை மறக்கத்



படிப்பகம்

padippakam

களைப்பற்றிக் கூறுவதே மிகக் கூர்ந்து அவதானிக்கற்பாலது. அதாவது மக்களைப் பொறுத்தளவில் – அரசு என்ற அருவ வழிபாடு ஆரம்பிப்பது மனத்திலேதான். இந்த மனத்தை ஆசை வார்த்தை காட்டியே வழிக்குக் கொண்டுவர முடியவில்லை. அப்படியிருக்க அச்சுறுத்தி அந்தச் சட்டம், இந்தச் சட்டம் என்று பாச்சா காட்டினால் பயந்துபோய் வழிபாட்டினை ஆரம்பித்துவிடுமா? ஏற்கனவே இருக்கின்ற தேசப்பற்றும் கொஞ்ச நஞ்சமுமில்லாமல் கரைந்து கொண்டு செல்வதை அரசன்றி வேறு யாருமே ஊக்குவிக்கும் வழியறியார். ஏனிந்த அவலம்? ஏன் நாங்கள் தோற்றுப் போனோம்?

## சுதந்திரக் களிப்பும் கழிப்பும்

இற்றைக்கு 200 வருடங்களுக்கு முன்னர் மொத்தத்தில் 20 அரசுகளுக்குக் குறைவாகவே இப்பூமியில் இருந்ததாக வரலாற்றாசிரியர்கள் கூறுகிறார்கள். ஏனைய நிலப்பகுதிகள் நகர அரசுகளாகவும் சிற்றரசுகளாகவும் இருந்தன. இனக்குழுக்கள் அங்கு மிங்குமாக அடர்த்தியுடன் வாழ்ந்த போதிலும் அவை ஆள்புல எல்லைகளை மையப்படுத்திய அடையாளம் என்பதைத் தேசியவாதத்தின் பின்னரே பெற்றுக் கொண்டன. இந்த மாற்றத்தின் காரணமாகவே எல்லைகளுள்ள நாடுகள் தோன்ற நாமும் அதற்குள்ளாக அடங்கிப்போக வேண்டியதாயிற்று. அரசியல் அதிகார அமைப்பே அரசு என்ற பெயரையும் பெற்றுக் கொண்டது. இங்கேதான் மக்கள் தேசப்பற்று என்பதை விரும்பியோ விரும்பாமலோ அந்த அரசியல் அதிகாரத்தின்பால் கொண்டிருக்க வேண்டியதாயிற்று. நடைமுறையில் இதன் விளைவுகளைப் பார்ப்போம்.

அரசு சட்டத்தை ஆக்குகின்றது. அதனைச் செயற்படுத்துகின்றது. பிரசைகள் மீது கட்டுப்பாட்டைக் கொண்டு வருகின்றது. இறைவரி மூலம் பணத்தை எடுக்கின்றது. சிலரைச் சிறையில் போடுகின்றது. கட்டாய ஆட்சேர்ப்பில் இராணுவத்துக்கு அழைக்கின்றது.

ஆயினும் அரசின் இத்தகைய அதிகாரத்தின் தன்மை, அடிப்படைகள் மற்றும் வரையறைகள் பற்றிய வினாக்கள் பல உள்ளன. இந்த வினாக்கள் எங்கிருந்து பிறக்கின்றனவோ அங்குதான் ஜனநாயகம் தன் தலையைக் காட்டுகின்றது என்கிறோம். ஆக, ஜனநாயகம் என்றால் அரசின் ஆதிக்க எல்லை என்று பொருள். அதாவது அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்பட்ட, கண்காணிப்புக்குட்பட்ட, தார்மீக அடிப்படை கொண்ட அரசின் உள்ளமை ஜனநாயகம் என்ற தகுதியை அதற்குக் கொடுக்கின்றது. இந்தப் பின்னணியில் இலங்கையில் அரசின் அதிகாரம் எந்த மட்டத்தில் இருந்தது, அது தேசிய ஒருங்கிணைப்பை ஏற்படுத்தும்



படிப்பகம்

padippakam

# சுதந்திரத்தின் 50 வருடத் தோல்வி!

வி.ரி.தமிழ்மாறன்

இலங்கை சுதந்திரமடைந்து 50 வருடங்கள் ஆகி விட்டது. இந்த ஆண்டு பொன்விழா ஆண்டென்று ஆங்காங்கே கொண்டாட்டங்கள் நடைபெறுகின்றன. ஆனால் மக்களைப் பொறுத்தவரையில் 'சுதந்திரம்' என்ற சொல்லின் அர்த்தம் புரியாமல் தடுமாறிக் கொண்டிருக்கிறார்கள். நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப் பிரச்சனையால் பாதிக்கப்படாத எந்த வொரு குடும்பமும் இன்று இலங்கையில் இல்லையென்று திட்ட வட்டமாகக் கூறமுடியும். 50 வருடச் செயல்கள், செய்யாமைகளின் மொத்த விளைவாகவே இந்தப் பாதிப்பு ஏற்பட்டிருக்கின்றது. பயனை எல்லோரும் அனுபவிக்கின்றார்கள். என்னென்ன பயன்கள் என்று பட்டியலிட்டால் 50 வருடச் சுதந்திரத்தின் பயனென்ன? கொண்டாட்டம் பொருத்தமானதா என்பதை ஒவ்வொரு பிரசையும் எடை போட்டிட முடியும்.

குடியேற்றவாதிகள், ஏகாதிபத்தியவாதிகள், முதலாளி வர்க்கச் சார்புலகு என்று கோஷங்களை மிகைப்படுத்தியதன் மூலம் அந்நியராட்சி இந்நாட்டில் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. எம்மை நாமே ஆளுஞ்சுதந்திரம் அடைந்து விட்டோம் என்று ஆடிப்பாடும் நிலை மக்களுக்கு உண்மையாகவே ஏற்பட்டதா? அங்ஙனம் ஏற்படவில்லையென்றால் அதற்கான காரணங்கள் என்ன என்பதை ஆராய்வதே எனது இக்கட்டுரையின் நோக்கமாகும். இனிவரப்போகும் கட்டுரை களுக்கான ஆரம்பமுனையாக, அடித்தள மாக இக்கட்டுரை பயன்படுதல் அவசியமாகின்றது. ஜனநாயகத்துக்கான தோல்வியிலிருந்து சுதந்திரம் பிறக்க முடியுமா என்பதை வாசகர்கள் இக்கட்டுரையின் முடிவில் தீர்மானித்துக் கொள்ள வேண்டும்.

இந்தியாவின் சட்ட மேதையும் அமெரிக்காவுக்கான முன்னாள் இந்தியத் தூதராக இருந்தவருமான பேராசிரியர் நானி ஏ. பல்கிவாலா இந்தியச் சுதந்திரப் பொன்விழா குறித்து எழுதுகையில், "தேசிய ஒருங்கிணைப்பு என்பது பிரசைகளின் இதயங்களில் பிறக்கின்றது. அது அங்கே இறக்கும்போது, எந்த இராணுவமும் அரசாங்கமும் அரசியல மைப்பும் அதனைப் பாதுகாத்துத் தூக்கி நிறுத்த முடியாது. மனங்களின் நிலை என்பது அரசுகளுக்கு முன்னால் வரவேண்டியது. (States of mind precede States). எல்லா மதங்களுக்கு மிடையிலான நல்லிணக்கத்திலும் மனச்சாட்சியினதும் அடிப்படை யிலமைந்ததான அவசியமான ஐக்கியமே எமது தேசிய ஒருங்கிணைப்பின் இதயமாக அமைய வேண்டியதாகும்". மேலுள்ள கூற்றில் அவர் மனங்



படிப்பகம்

எந்தக் குடை நிழலின் கீழும் இல்லை.
எந்தக் கொடி நிழலின் கீழும் இல்லை.
எந்த வகை அதிகாரச் சொற்கட்டு மானங்களுக்குள்ளும் இல்லை. ஏவுகிற சொற்களின் எடுபிடியுமல்லன். எவரையும் தன்னடிமை கொள்பவனுமல்லன்.

நான் சுயஞ்ஞன்
நான் சுதந்திரன்

சொல்லிக்கொண்டே தொடுவெளியின் உணர் நரம்பினைப் பற்றியபடி இறங்குகிறேன். இறங்குதளத்தில் எரிகிறது யாககுண்டம். சொற்களை இடுபொருள் செய்கிறேன்.
சொற்களே நீங்கள் கட்டறுக.
சொற்களே நீங்கள் சுதந்தரிக்குக.
சொற்களே சுயம்பு கொள்க.

இடுபொருளாகிய சொற்கள் தீயில் தோய்ந்து முழுகி எழுகின்றன முகங்கொள்கின்றன. ஆயிர முக வீரர்கள். வேள்விக் கொழுந்தில் விளைந்த புதல்வர்கள். வெளிப்பட்டு வருகிறார்கள். 'அவிந்து அடங்கி சுயம்பு கொள்க' என தண்ணீர் தெளித்தேன். தரங்கையடங்கிக் கனியக் கனியரின் நார்கள் தீங்கனிகள் தெளிவுக் கனிகள்.

என்முன் அவர்களில் ஒருவனை அழைத்தேன். ஒளிநட்சத்திரமாக மின்னும் அகமுகன் சுதந்திரச் சுடர்முகன். இவனைச் சுற்றிலும் சொற்களின் சுடர் மின்னோட்டம்.
'உனைச்சில கேட்பேன்'
'கேட்கலாம்'
'யார் நீ?'
'கட்டறுப்போன்'
'தொழில்?'
'எனக்குத் தொழில் கட்டறுத்தல்
எங்குஞ் சுதந்திரச் சுடர் கொளுத்தல்'
'சொற்களின் சூக்குமச் சுடர்வாயிருப்பது?'
'சுதந்திரம்'
'சோற்றோடு மற்றச் சுகங்களின் வசமாகிச் சோர்வுறாச் சொல் எது?'
'சுதந்திரம்'
'சொற்பதந்தாண்டிச் சுட்டிறந்தும் நிற்பது?'
'சுதந்திரம்'
'சுதந்திரன் என்பவன்?'
'சொற்களின் அதிகாரக் கட்டுகளறுத்தவன்'

'சுதந்திரம் என்பது?'
'சொற்களை அறுக்கும் சொல்'

சொல் அற இருந்தேன். ஆயினும் என்னில் சுடர் கொளுத்தி அணி நடந்தன சுதந்திரமேந்திய சொற்கள்!!

***சு. வில்வரெத்தினம்***
*02 ஏப்ரல் 1998*



போலிகளென்பது. எனக்கு வேண்டுவதோ சுடரொளி காலும் பரல்கள். சுதந்திர ஒளிவளர் சொற்கள். சொற்களின் உள்வளர் சோதி.

ஆனால் என் சுதந்திர இலக்கை வழிமறித்துக் கிடந்தன என்னுள் விலங்கிடப்பட்ட சொற்கள். என் சுயத்தைக் கண்டடைதலுக்கெதிராய் என்னுள்தான் எத்தனை சொற்சோர்வுகள் சோரம்போதல்கள், சொல்லடிமைகள், சொல் நக்குண்ணித்தனங்கள். ஆதலால் நான் என் சொற்களின் மீதான கடிவாளத்தை இறுக்கினேன். சொல் விற்பனவுச் சந்தையிலே சோரம் போய்விடாதீர்கள். மலிவான பண்டங்களின் மாற்றீடாகிவிடாதீர்கள் என்றெச்சரித்தேன். சோற்றுப் பிண்டங்களென மாளிகை வாசல்களில், சுதந்திரத்தை மதியாதாற் குடைநிழலில் அடிபணிந்து கிடவாமல் அகத்தீ வளர்த்தபடி இருங்களென சவுக்கை வீசினேன். அவ்வளவே. அவிந்து கிடந்த யாக குண்டத்தினுள் நிகழ்ந்த வாயுவேக உதைப்பில் மூண்டெழுந்த தீயின் முனை பாம்பின் வாயெனப் பிளந்து சவுக்கின் நுனி பற்றி மேலெழுந்தது.

தீ வளர்க
சொற்களே ஆகுதியாகத் தீ வளர்க.
சொற்கள் இடுபொருள்கள் ஆகின்றன.
தீ வளர்கின்றது.
தீ வளர்க; தீ மூண்ட சொல் வளர்க.
சொல்லின் ஜபநாதத் தொனிமூட்டலில் சோதிமயத் தீ எழுகின்றது.

தீயின் எழுகை தீயின் எரிகை தீயின் தீண்டுகை. தீ எரிகின்றது. தீயின் வசமாகித் தீய்கின்றன சொற்சோர்வுகள். சொல்லின் சோரம்போதல்கள் சொல்லடிமைத்தனங்கள். சொற்களை விழுங்கி எழுகிறது ஒரே ஜபம். சுலோகங்களை விழுங்கியபடி ஒரே சுலோகம். சொற்களின் தோல் கழற்றி சோதி மயமுற மேலெழுகிறது நாகப் பாம்பு. நாகத்தின் வாய் நுனியில் சுடரெறியும் சொல் விளக்கு. சொல்லின் சுடர்மணி விளக்கை ஏந்தியபடி என்மேல் சுதந்திரக்குடை விரிப்பதெனப் படம் விரிக்கிறது நாகம். நாகத்தின் முடி மினுங்கும் நீலமணி போல், நெற்றிப் புருவத்தை நோக்கிய கண்குவிப்புகள் திரள்கிறது நீலச் சுடர்விழி. சுட்டும் சுடர்விழி. உற்று நோக்குகிறேன். ஒரு குரல் தொனிக்கிறது. விட்டு விட்டுத் தொனி உமிழும் குமிழிகள் மனசின் மேற்பரப்பில் மிதக்கிறது 'சுட்டிறந்து நில் சுட்டிறந்து நில் சுட்டிறந்து'.

நெற்றிச்சுட்டை வெட்டி விலக்கி எட்டிக் கவடெடுத்தேன் எல்லாச் சொல் மண்டலங்களையும் தாண்டிய எழுகையின் வெளிப்பாடு. வெளி பேர்வெளி சுதந்திரப் பெருவெளி நிர்வாண நெடுவெளி.

எனைச் சூழவும் சொற்கள் மீட்டும் சுதந்திர நாதம். சொற்களின் அதிகாரக் கட்டுகளறுத்த சுதந்திர போகம். இப்போது நான் சொல்லீர்ப்பு மண்டிலத்துள் இல்லை.

சொற்கள் திணித்த அதிகாரத்தைச் சிதறடிக்கவுமில்லை. முணுமுணுப்புகளும், முனகல்களும், முட்டறுக்காத சொற்களும், வெறுஞ் சிலுசிலுப்பைகளாயின. வெடிமருந்தில்லாத வீறாப்புகளாயின.

என்னுடைய வாய்ப்பந்தல்களை மேவி அந்நியச் சொல்லதிகாரத்தின் முள்வேலிகள் எழுந்தன. சுரணையற்ற என் சொற்களைச் சுற்றி வளைத்த முட்கள் கீறின் கிழித்தன. அடிமைத்தனத்தின் தடிப்பேறிய சொற்களின் உள்ளே சொச்சமாயிருந்த சுயத்தில் ஒரு ஆணி தைத்ததும் ரத்தம் சொட்டிற்று. சொல்லிழை உள் நரம்புகள் எல்லாம் சுண்ட வலித்தபோது தான் என் சொற்களின் சுயம் தன்னைத் தொட்டுச் சுவைக்கத் தொடங்கியது. சொற்களில் மேலும் வலி ஏறிற்று. சுதந்திர வலியும் துடிப்பும் ஏறிற்று. அறுபட்ட பல்லி வாலாய்த் துடித்தவை பிரக்ஞையின் தொடர் அறுபடாமல் துடித்தன. பிரக்ஞையின் தொடரினுள் பாய்ந்தது பாரம்பரிய சுதந்திர ரத்தம். பன்முகத் தலை கொண்ட ஆதிசேடனின் வாலிலிருந்து தலைவழி நீளும் நாவின் நுனி வரை ஒரே உயிர்த் துடிப்பென என் பண்பாட்டின் பாதிக்கப்பட்ட முகங்கள் அனைத்திலும் அந்தத் துடிப்பு பாய்ந்தது.

இப்பொழுது எனது அகம் உயிரேறிய சொற்களின் உலைகூடம்.

சொற்கள் இயக்கமுறுகின்றன.
சொற்கள் இரத்தோட்டம் கொள்கின்றன.
சொற்கள் சூடேற்றப்படுகின்றன.
சொற்கள் புடமிடப்படுகின்றன.
சொற்களில் ஊறிய நூற்றாண்டுக் களிம்புகள் அகல்கின்றன.
சுயத்திலே வார்க்கப்படும் சொல்லாயுதங்கள் காற்றிலே தீயுரசிக் கனன்று தாக்க அதிகாரத்தின் சுற்றி வளைப்புச் சொற்கட்டுமானப் பொருத்துகள் இற்று விழத் தொடங்குவன.

சொற்களின் காவலர்கள் திகைக்கிறார்கள். கோட்டை, கொத்தளங்களைச் சூழவும், தீமூண்ட சொல்லாஸ்திரங்கள் திரிவது குறித்துத் தீவிரமாய்ச் சிந்திக்கிறார்கள். கூடிக் கலந்து மண்டைகளைக் குடைந்து கடைந்து சொற்களின் சுருதி மாற்றிப் புனரமைத்தெடுத்த சொற்களால் சாசனம் ஒன்று வரைதல் தொடங்கினர். 'சுதந்திரம்' என்ற சொல் ஒளித்து விளையாடப்பட்டது. சொத்தை மிகுந்த சொற்களைப் பூசி மினுக்கி அடிமைத்தனத்தை மீள் குடியேற்றும் வித்தைகள் அடங்கிய சாசனம் ஒன்றைத் தங்கப் பேழையில் உலகரங்கின் முன் வைத்தனர். "வைச்சுக்கம்மா வைச்சுக்க வாழைப்பழத்தையும் சோத்தையும்" எங்களுக்குத் தெரியும் இது பழைய புளிச்ச வாழைப்பழச் சொதப்பல்தான் என்பது. உலகம் உவப்ப இந்தச் சொற்களைச் சிலம்பமாடினார்கள். இந்தச் சொற்சிலம்பை உடைத்தால் தெரியும் உட்பொதிந்திருப்பவை அனைத்தும் உண்மைப் பரல்களல்ல. பதிலீட்டுப்

எழுதிக்கொண்டிருக்கையில் அவர்கள் வந்தார்கள் சொல் பிடுங்கும் கருவிகளுடன். 'திசைகளில் எழுதும் சுதந்திரம் உனக்கு மறுக்கப்படுகிறது' என்றார்கள். எனக்கு மறுக்கப்படும் சுதந்திரம் உனக்கு அர்த்த முடையதாவது எங்ஙனம் - ஒடுக்கும் கருவியாகவா? என்று கேட்டேன். அவ்வளவுதான். சுட்டுவிரலையும், சொற்களையும் வெண்கட்டியை ஒடிப்பது போல ஒடித்துப் போட்டார்கள். என் பற்களையும் பதம் பார்த்து தேங்காய்ச் சொட்டுக்களாக கைகளில் தந்து சென்றார்கள். என் சொற்களெல்லாம் இரத்தம் சொட்டின.

பிறகொரு நாள் வந்தார்கள் கட்டுமானங்களைத் தகர்க்கும் மேலும் கருவிகளுடன். 'சுதந்திரத் தூபியை நிறுவுதற்கான சொற்கட்டுமானங்கள் இருப்பில் உள்ளனவாமே'
என்றெனது பண்பாட்டின்
உச்சிகளை, பாரம்பரியச்
சுவடிகளையெல்லாம் தீயி
லிட்டார்கள். கண்ணெதிரே
கருகிக் கிடந்தன என்
சொற்கள். பதிலீடாய் அந்
நியச் சொற்களினாலான
சாசன வரைவை
திணித்துச் சென்றார்கள்
அந்தச் சொல்பிடுங்கிகள்.
அதிகார வரைவின்
சுருக்குச் சொற்றொடர்கள்
என்மேல் அருவருப்பான
புழுக்களாய் ஊர்ந்தன.

அதிகார வரைவில்
உள்ளோடியிருந்த சொல்
லொன்று அசிங்கமான
சூத்தைப் பல்லைக்காட்டி
என்னை இழித்தது
பழித்தது. ஆதிக்க
முழிபெயர்த்து என்னை
மிரட்டியது. அதிகார
வரைவிலும் சூசகமாய்
ஒளித்து வைக்கப்பட்
டிருந்த அந்தச் சொல்
எனக்கு மட்டும்தான் எது
வெனப் புரிந்தது.
'சுதந்திரன்' என்ற
இன் சொல்லிற்குப்
பதிலாக என்னைச் சுட்டி
இழித்த சொல்
இழிசொல் - அடிமை
என்பது புரிந்தது.

'அடிமை என்று சொல்லடா,
அடிபணிந்து நில்லடா'

நின்றேன் அடிமைச் சகதியில் கால்கள் புதையப் புதைய, மாற்றி மாற்றி எழுதப்பட்ட சாசனங்கள் யாவும் மாற்றுக் குறையாத அடிமைத்தனத்தை என்மீது திணிக்கத் திணிக்க நூற்றாண்டுகளின் பொதிச் சுமையோடு நின்றேன். பொதி நிரம்ப அதிகாரம் என்மேல் திணித்த நூற்றாண்டுகளின் களிம்பூறிய சொற்கள். கால்கள் வலிக்க, வலிக்க கால் மாற்றி மாற்றி பொதியைத் தாங்கினேன். பொதியின் சுமைகளை இறக்கவுமில்லை அதிகாரம் திணித்த சொற்களை உதறவுமில்லை

padippakam

# சுதந்திரம் என்றொரு சொல்

நாகமணியைக் கக்கி நடுவே வைத்துவிட்டு அதன் ஒளியில் இரை தேடிக் கொண்டிருக்கிறது நாகம்.ஒருகயவன் வருகிறான். பச்சைச் சாணக்கழிவினால் அதை மூடித் திருடிச் செல்லுகிறான். தன் கண்ணின் மணியை காவு கொடுத்ததென தத்தளிக்கிறது நாகம். கண்மணியும் அல்ல அதன் உண்மணி. உள்ளே சுரந்த நீலத்திராவகமான நஞ்சைத் திரட்டித் திரட்டி, மறு உருவாக மாற்றிடும் ரசவாத வித்தையால் விளைத்தெடுத்த ஒளிகாலும் உள்மணி. அது இன்று பறி போயிற்று. அதன் இரை தேடும் பரப்பும் இருண்டு போயிற்று.

இப்படியேதான் என்னிடமிருந்து பிடுங்கப்பட்டது ஒரு சொல். எனது வாழ்வெனும் பரப்பின் நடுநின்று ஒளியீந்த ஒரு சொல். பிடுங்கப்பட்டதும் நான் இருளில் விடப்பட்டேன். பிடுங்கியவர்கள் அச்சொல்லைத் தம் கோடிக்குள் வைத்து ஒளித்து விளையாடினார்கள். தமக்கு மட்டுமே அச்சொல் உரித்துடையது என்றார்கள். சொற்களின் ஆதார சுருதியாய் இருக்க வேண்டியது எதுவோ, சொற்களெல்லாம் எதை நோக்கி நாவெறிந்து தாகித்து எழவேண்டுமோ அதைப் பறிகொடுத்த பின்னால் எல்லாச் சொற்களுமே பொருள் குறிக்காதனவாயின எனக்கு – எழுச்சியற்றுப்போன ஈனச்சொற்கள் ஆயின.

ஆன்மாவை இழந்து, வெறுஞ் சோற்றுக்காய் மல்லாடுகிற சொற்கள் அல்ல. நான் வேண்டுவது ஆன்மாவைச் சுதந்தரிக்கும் சொல். சுதந்திர வெளியிடைப் புணருஞ் சொல். வாழ்வு சுடர்த்தும் வைரமணிச் சொல். நாகமணி போலும் முடியில் சூடிக் கொளத்தகுந்த சுதந்திரம் என்றவொரு சொல். அந்தச் சொல் –சொற்கள் அனைத்தினதும் சுட்டும் விழியாகி நின்ற சொல் என்னிடமிருந்து பிடுங்கப்பட்டதுமே இருண்டு போயிற்று என் வாழ்வெனும் பரப்பு. ஆயினும் என் இரைதேடல் இன்னொரு முகம் கொள்ளத் தொடங்கியது. இழந்ததைத் தேடல் என்பதாகிய முகம்.

எனவே என்வசமிருந்த சொற்கள் யாவற்றையும், கட்டுத்தளை அறுத்து விட்டு விடுதலையாகத் தூண்டினேன். சுதந்திரத்தையே தியானித்திருக்கப் பயிற்றினேன். சுதந்திரத்தையே சுலோகித்திருக்கவும், ஜபித்திருக்கவும் சொன்னேன். திசைகளின் சுவரெல்லாம் சுதந்திரமென்றே எழுதுகவென என் சுட்டுவிரலுக்குக் கட்டளையிட்டேன்.



படிப்பகம்

புலமைப் பரிசில்கள்) கல்வியில் பின்தங்கிய மக்களைக் கருத்திற் கொண்டனவாய் இருந்த போதிலும் பின்தங்கிய தமிழ் மக்களை, குறிப்பாக மலையகத் தமிழர்களை எட்டவில்லை. 1830 ஆம் ஆண்டு தொடக்கம் 160 ஆண்டு காலப்பகுதியில் இவர்களில் 75 வீதமானவர்கள் சாதாரண பெருந்தோட்ட வேலையைச் செய்யும் நிலையில் பெரிய மாற்றம் நிகழவில்லை. அவர்கள் தொடர்ந்து பெருந்தோட்டத் தொழில்களையும் நகர்ப்புறங்களில் உடல் உழைப்புத் தொழில்களையுமே நம்பி வாழுகின்றனர். கல்வியினால் ஏற்படக்கூடிய சமூக மாற்றம் பற்றிப் பெரிதாகப் பேசப்பட்ட போதிலும் மலையக மக்களைப் பொறுத்தவரையில் கல்வியின் தொழிற்பாடு அவர்களை ஒரே சமநிலையில் வைத்திருப்பதாகவே அமைந்து, பெருந்தோட்டப் பகுதியின் தொழிலாளர் தேவையை நிறைவு செய்வதாக அமைந்தது. அதற்கு ஏற்பவே அவர்களுக்குக் கல்வி வசதிகள் அமைந்தன. கல்வி வாய்ப்புகளைத் தெரிவு செய்யப்பட்ட சில பிரிவினருக்கு மட்டும் வழங்கி அவர்களுடைய முன்னேற்றத்தை மட்டும் உறுதி செய்யும் வகையில் கல்விக் கொள்கை தீர்மானிக்கப்பட்டு வந்தது. ஏற்கனவே கூறியவாறு கல்விச் செயற்பாடு இத்தகைய எதிர்மறைப் போக்கில் விளைவுகளை ஏற்படுத்தும் என்ற தீவிர சிந்தனையாளர்களின் கருத்து இலங்கையைப் பொறுத்தவரையிலும் சரியாகவே இருக்கின்றது.

கல்வி முறை, கல்விச் செயற்பாடு பற்றிய சிந்தனை அவற்றை சமூக வளர்ச்சிக்கான உடன்பாட்டுக் காரணி என எவ்வளவுதான் வலியுறுத்திய போதிலும் நடைமுறையில் கல்வி முறையானது, சமூக ஏற்ற தாழ்வுகளை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதாகவும் அரசின் உறுதிப் பாட்டைக் கருத்திற் கொண்டதாகவும் பரீட்சைகளுக்கும் கல்வித் தகுதிகளுக்கும் முக்கியத்துவ மளிப்பதாகவும் சிறுபான்மையினர்களின் கல்வி முறைகளை அலட்சியம் செய்வதாகவுமே இருந்து வந்துள்ளது. கல்வி முறையின் இத்தகைய போக்குகள்,

கல்வி முறையின் உயர்தர இலக்குகளான அறிவுசார் ஒழுக்க நடத்தை (intellectual discipline) நற்பிரசைப் பயிற்சி, குடியியல் பொறுப்புணர்வை வளர்த்தல், பொருளாதார சுதந்திரம், தொழில் வாய்ப்பு, சமூக வளர்ச்சி, ஒழுக்க மேம்பாடு போன்றனவற்றை இல்லாதொழிக்கும் தன்மையனவாக விளங்குகின்றன.



padippakam

"அக்கினிக் குஞ்சொன்று
கண்டேன் – அதை
ஆங்கொரு காட்டினோர்
பொந்திடை வைத்தேன்
வெந்து தணிந்தது காடு –
தழல்
வீரத்திற் குஞ்சென்று
மூப்பென்று முண்டோ?"

இங்கு பாரதி குறிப்பிடும் 'தழல் வீரம்' என்னும் பதத்தை ஒரு கவிஞனின் தரிசன வீச்சுக் கொண்ட கவிதையாக எடுத்துக் கொண்டால், அக்கவிதை எவ்வளவு சிறியதாக இருந்தபோதும் தன் கலைத்துவத் தரிசனத்தால் சோதிமிக்க நவகவிதையாக நிமிர்ந்தெழுகிறது. இத்தகைய 'தழல் வீரம்' இல்லாத கவிதைகள் எவ்வளவு பெரியதாக இருந்தபோதும் அவை சோபிக்கப் போவதில்லை.

நமது இலக்கியப் பரப்பில் (இது எல்லா நாடுகளுக்கும் பொதுவானது) அவ்வப்போது இத்தகைய தரிசன வீச்சும் அதற்கெதிரான தரிசன வரட்சியும் கொண்ட கவிதைகள் தோன்றியுள்ளதை நாம் காண்கிறோம். இதற்குரிய காரணங்கள் என்ன?

ஏற்கனவே ஒரு சமூகம் ஆழமான கலாசார விழுமியங்களை உடையதாக, அத்தகைய சிந்தனையாளர்கள், தத்துவ ஞானிகள், கலைஞர்கள் போன்றவர்களால் பண்படுத்தப்பட்டதாக இருக்கும் பட்சத்தில் அத்தகைய பின்புலத்தில் தோன்றும் தரமான கவிஞன் அவற்றை உள்வாங்கி, தன் படைப்புகளை ஆழமான தரிசன வீச்சுடையவையாக ஆக்கித் தருகிறான். சிலவேளை இத்தகைய ஆழமான பண்பாட்டுச் சூழல் இல்லாத பின்னணியைக் கொண்ட சமூகத்தில் தோன்றும் படைப்பாற்றல் உள்ள சில கலைஞர்கள், தாமே தமது ஆழமான உள்ளுணர்வின் வழிச்சென்று தமது தரிசனம் மிக்க படைப்புகள் மூலம் அச்சமூகம் அனைத்துக்கும் ஓர் பாரிய, ஆழமான பண்பாட்டுச் சூழலையும் கருத்தியலையும் வழங்குவதும் உண்டு. இங்கே இக்கவிஞனின் படைப்பு, கவிதையாகவும், சமூக சிந்தனை, கருத்தியல் ஒளிச் சிதறல்களாகவும் இரட்டைத் தொழில் புரிகின்றது. சில கவிஞர்கள் இதைப் புத்திபூர்வமான பிரக்ஞை இன்றி வெறும் அடிமன உந்துதல் மூலமும் செய்வதுண்டு. சிலவேளைகளில் அவர்களே இத்தகைய தம் செயலைப் பிறர் புரிந்து கூறும்போது வியப்பதும் உண்டு.

இத்தகைய ஆற்றல் உள்ள கவிஞர்கள் (கலைஞர்கள்) இல்லாத போது, நமக்கு மிஞ்சுவது கவிதை என்ற பேரில் வெறும் வித்துவச் செருக்கும் சொல்லலங்காரச் சித்து விளையாட்டுக்களுமே.

சங்க காலத்திலிருந்து இளங்கோ, கம்பன் வரை இத்தகைய ஆழமான கருத்தியல் மினுக்கங்காட்டும் கவிதைப்



படிப்பகம்

போக்கை நாம் காணலாம். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற ஓர் பரந்துபட்ட பார்வை, இளங்கோ, திருக்குறள் வழியாக வந்து கம்பனில் இது பெரும் சிகரத்தைத் தொடுகிறது. கம்பனது 'உலகம் யாவையும் தாமுள வாக்கலும்' என்ற முதல் கவிதையே சமயம் இனம் குலம் கடந்த, அனைவருக்கும் பொதுவான பார்வையையே முன்வைக்கிறது.

ஆனால் இதன் பின்னர், இத்தகைய பார்வை படிப்படியாக மிகப் பின்னடைவுற்று சீரழிந்து போவதை நாம் காண்கிறோம். நாயக்கர் காலம் இச்சீரழிவின் மொத்த உருவமாகக் காட்சி தருகிறது. 'யமகம்', 'சிலேடை' என்று கவிதை வெறும் வித்துவக் காய்ச்சலாய் மாறுகிறதேயொழிய ஆழமான தரிசன வீச்சுடையவையாக எவையும் தேறவில்லை. அதாவது அவை யெவையும் பாரதி கூறும் 'அக்கினிக் குஞ்சாக' பரிணமிக்கவில்லை. 'இம்மென்னும் முன்னே எழுநூறும் எண்ணூறும் அம்மென்றால் ஆயிரம் பாட்டு' தந்த காளமேகம் போன்ற கவிஞர்களாலேயே இத்தகைய விரிவைப் பாய்ச்ச முடியவில்லையென்றால் அதற்குக் காரணம் நாம் ஆரம்பத்தில் குறிப்பிட்ட உள்ளொளி பாய்ச்சும் தரிசனமின்மையே. இவர்களிடம் தமது முன்னைய பண்பாட்டுச் சூழலில் இருந்து ஓடிவரும் ஆழமான கலைப் பாரம்பரியத்தோடு தம்மைத் தொடர்பு படுத்தி, புதுமை காணும் உள்ளொளி இருக்கவில்லை. இந்த உள்ளொளி இன்மையால், இவர்கள் தம் கவிதை எழுதும் ஆற்றல்களை யெல்லாம் ஒவ்வொரு சூத்திரத்திற்கேற்ப கவிதை எழுதும் வித்துவத்தில் செலவிட்டனரே ஒழிய, கலைச் சிருஷ்டி என்னும் உன்னதங்களில் ஈடுபடவில்லை.

ஆனால் இந்த நீண்ட வரட்சி பாரதியின் தோற்றத்தோடு முற்றுப் பெறுகிறது. பாரதியின் வருகை, மீண்டும் வள்ளுவன் இளங்கோ கம்பன் வழிவந்த கலாமேன்மையோடு தொடர்பு கொள்வதோடு இனி வரப்போகும் புதுமைகளுக்கும் கட்டியங் கூறுவதாய் அமைகிறது. அதனால்தான் அவனால் 'இடிபட்ட சுவர்போல் கலி விழுந்தான் கிருதயுகம் எழுகமாதோ' என்று ரஷ்ஷிய பொதுவுடைமைப் புரட்சியையும் தன் வேதாந்தப் பார்வைக்குள் இழுத்துவிட முடிகிறது. இங்கே மகாகவி பாரதியே தன்னந்தனியனாய், வரண்டு கிடந்த தமிழ்ப் பாலைநிலத்தில் புதுச் சிந்தனை ஓட்டத்தையும் தத்துவப் போக்கையும் கலாமேதமையையும் தன் 'பாட்டுத் திறத்'தால் பரவ விடுகிறான். அதன் மூலம் தமிழ்க் கவிதைப் பாரம்பரியம் மதர்த்தெழ வாய்ப்பேற்படுகிறது.

ஆனால் பாரதியின் மறைவு, மீண்டும் தமிழ் நிலத்தில் கருமை படர இடமளிக்கிறது. தி.க., தி.மு.க. போன்ற தமிழ் அரசியல் சமூக இயக்கங்களின் எழுச்சி, பாரதியின் வழி ஓடி வந்த ஆழமான கலைத்துவப் பண்பாட்டு

padippakam

எழுச்சிக்குத் தடையாக நிற்கிறது. மேற்குலகில் வாழ்ந்த இங்கர்சால் போன்ற அரைகுறைப் புத்தி ஜீவிகளின் கருத்துக்களை உள்வாங்கிய தி.மு.க. இயக்கங்களின் போக்கு தமிழ் பண்பாட்டின் ஆழங்களை அறிய விடாது ஆரிய மாயையைப் போர்வையாகக் கொள்கிறது. இது உயர்ந்த பார்வையுடைய, தரிசன வீச்சுமிக்க கவிஞர்களின் எழுச்சிக்குத் தடையாக நிற்கிறது. இதற்கு சிறந்த உதாரணமாக, ஆரம்பத்தில் பாரதியின் கவிதைகளால் கவரப்பட்டு பின்னர் வேறு திசைக்குத் திரும்பிய பாரதிதாசனைக் கொள்ளலாம்.

பாரதிதாசன் எவ்வளவோ ஆக்கங்களைத் தந்தபோதும் அவரது ஆக்கங்கள் எவையும் தாகூரின் 'கீதாஞ்சலி', பாரதியின் 'பாஞ்சாலி சபதம்' 'வசன கவிதைகள்' போன்ற வற்றுக்கு இணையான விரிவைக் காட்டுவனவாய் இல்லை என்பதைக் கூறத்தான் வேண்டும். மாறாக ஆரிய எதிர்ப்பு, பார்ப்பன எதிர்ப்பு, குறிஞ்சித் திரட்டு தமிழ் உணர்ச்சிக் கவிதைகள் என்று குறுக்கங்களுக்குள்தான் அவரது கவிதைகள் சுற்றிவந்தன. இது எப்படி ஒரு காலத்து சாமான்ய (Mediocre) சமூக, அரசியல் சிந்தனைகள் அக்காலத்து கலைஞர்கள், கவிஞர் களைப் பாதிக்கிறது என்பதைக் காட்டுகிறது. ஆனால் கலைஞன் ஒருவன் தரிசனம் மிக்கவனாக இருந்தால், தனக்குத் தடையாக முன்னிருக்கும் அக்காலத்து சாமான்ய அரைவேக்காட்டுச் சிந்தனைகளையும் தத்துவங்களையும் உடைத்தெறிந்து கொண்டு மேலெழுகிறான். பாரதி தாசனிடம் அத்தகைய ஆளுமை (பாரதியிடமிருந்த) இல்லை என்றே தோன்றுகிறது.

இன்று தமிழ்த் தேசியத்திற்காக போராடும் இலங்கையில், அது பற்றிய ஆழமான தரிசனம் மிக்க, கருத்தியல் வெளிக்கோடுகள் தெரியும் கவிதைகள் தோன்றியுள்ளனவா என்பதும் இச்சந்தர்ப்பத்தில் கேட்கப்பட வேண்டிய ஒன்றே. பேரினவாதத்திற்கு எதிரான, இராணுவக் கொடுமைகளுக்கு எதிரான, அகதி வாழ்க்கை, அதனோடு ஒட்டிய அவலங்கள், இன்னும் பல அநீதிகளுக்கு எதிரான கவிதைகள் வந்துள்ளனவே தவிர, நம் போராட்டம் பற்றிய கருத்தியல் பாங்கான ஆழமான கவிதைகள் வரவில்லை என்றே கூற வேண்டும். இதற்குரிய காரணங்கள் நம் ஆய்வுக்குரியவை. பாரதியின் 'பாஞ்சாலி சபதம்' எவ்வாறு பெண் விடுதலை யையும் பாரதத்தின் விடுதலையையும் உள் முகமாகக் கொண்டு பெரும் கலைப் படைப்பாக விகசித்தெழுந்ததோ அவ்வாறு நம்மத்தியில் பெரும் கலைப்படைப்புகள் தோன்றுவதற்கான சாத்தியக் கூறுகள் உண்டா? அதற்குரிய கலைத்தரிசன வீச்சுடையோர் இருக்கிறார்களா? இறுதியாக, ஒரு கவிஞனின் தரிசன வீச்செனப்படுவது எத்தகையது என்பதைப் பார்ப்பதும் மிகத்தேவையான ஒன்றே.




படிப்பகம்

சகல கட்டுப்பெட்டித் தனங்களுக்கும் எதிராக இயங்கிக் கொண்டே முழுமனித குலத்தின் முற்போக்குப் பாய்ச்சல்களை மினுக்கமுறச் செய்யும் கருத்தியல் வெளிக் கோடுகளாய் அவன் படைப்புகள் இருக்கும்.

இத்தகைய படைப்புகள் பழமையைக் கட்டிப்பிடித்துக் கொண்டு கிடக்கும் பண்டிதப் போக்குகளுக்கு எதிராக இருக்கும் அதேவேளை, பழமையில் தொக்கியுள்ள உண்மையின் ஆழங்களை வெளிக்கொணர்ந்து தரிசிக்கச் செய்யும்.

சதா மாற்றத்தை சகலதிலும் காணும் அதேவேளை, அவற்றை அகப்புற இயக்கவியல் ரீதியாகப் புரிந்து கொண்டு வாழ்வின் அர்த்தத்தை மோப்பம் பிடித்து தேடி ஓடும் தரிசனமாக நீளும்.





# ஒரு மனிதனுக்கு எமது அஞ்சலி

ஓ ! மனிதனே !
மறைந்துவிட்டாயா?
எல்லாவற்றையும்
எரிக்க நினைத்த
தேசத்தில் நீ மட்டும் விதி
விலக்காக இருந்தாய்
விளக்காக எரிந்தாய்
உன் விரல்கள் தழுவும்
அந்த சுங்கானைத் தவிர
விட்டில்களைக்கூட நீ
சுட்டதில்லை !
எதிர்ப்புகளின் மேலே
ஏறி ஏறி உயர்ந்தாய்
உச்சிக்கே போய்
மனிதனாகி
மறைந்துவிட்டாய் !
மானிடம்
அஞ்சலிக்கிறது !
மரணிக்காதது
அது மட்டுந்தானே !
அதற்குள் உன் பெயர்
அனுதினம் வாழும் !
சாளி -
மனிதத்துள் வாழ் நீ !

-அநேகா இளங்கோவன்

padippakam


*With the Best Compliments*



திருப்பமே வருக
திறமைகள் பெருக
விருப்பமாய் நிறைந்து
விளக்கொளி தருக!

From

**BALASAROJA STORES**

**General Merchants & Commission Agents**
**192, Prince Street,**
**Colombo-11**
**T.P : 423582 / 330886**

*Branch:*
**6, South Lane,**
**Badulla.**
**T.P: 055-2445**


படிப்பகம்

# விற்பனையாகின்றன

க.பொ.த. உயர்தர வகுப்புக்கான பாடநூல்கள்.
தேர்வில் அதி உயர் சித்திபெறத் துணைபுரிவன.

கம்பராமாயணம் - திருவடி சூட்டுபடலம்.
(பதவுரை, பொழிப்பரை, விளக்கவுரை கொண்டது)

தேர்ந்த தமிழ்ச் சிறுகதைகள்.
(புதுமைப் பித்தன் கு.ப.ரா.கு. அழகிரிசாமி, இலங்கையர் கோன்,
சி.வைத்தியலிங்கம் ஆகியோரின் சிறுகதைத் தொகுப்பு.)

நாகம்மாள்
(நாவல்)

திருக்குறள் - ஒழிபியல்
(பத்வுரை, பொழிப்புரை, விளக்கவுரை கொண்டது.)

தொகுப்பாக்கம்:
இலக்கிய வித்தகர்

த. துரைசிங்கம்
B.A. (Hons), Dip-in-Ed., S.L.E.A.S.

லங்கா புத்தகசாலை
G.L. 1-2 டயஸ் பிளேஸ்,
குணசிங்கபுர
கொழும்பு- 12.
தொ.பேசி. 341942